176

ஸம்புடம் 12 }
ஸஞ்சிகை 4 }

ஸ்ரீ:

{ விஜய ஷூ
{ சித்திரை மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

ஸம்பாதகர்

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசாரியர், M. A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

தனிப்ரதி விலை 0—4—0

{ APRIL 1953
{ VOL 12 NO 4.

N53-12.4
199537

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. திருமங்கையாழ்வார் வைபவம்	104
[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான்' தேசிகதர்சநவிஜயத்வஜ, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம்ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	
2. சக்ரவர்த்தித்திருமகன் கருணை	109
[ஸ்ரீ. உப. வித்வான், முக்கூர், ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, உபாத்யக்ஷர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	
3. ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம்	114
[ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	
4. ஸம்பாதகரின் குறிப்புகள்	116
5. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்	119
[ஸ்ரீ. உப. வித்வான், காளி, மதத்ரயநிருபகர், வ. ரங்காசார்யஸ்வாமி, தேரழுந்தூர்.]	
6. செய்திகள்	121

சென்றவஞ்சிகையிலும் இந்த வஞ்சிகையிலுமுள்ள போட்டோ ப்ளாக்குகளைக் கொடுத்துதவிய அடியிற்கண்ட ஸ்வாமிகளுக்கு நம்முடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1. வி. நரஸிம்ஹ ஐயங்கார், ஸ்டேஷனரி எம்போரியம், 1. அரண்மனைக்காரத்தெரு, ஜீ. டி. மதராஸ்.
2. எஸ். லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், சுதேசமித்ரன், சென்னை.

ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின்

வைபவஸுதா

(திவ்ய சரிதம்)

விலை ரூ. 1–8–0, சந்தாதார்களுக்கு ரூ. 1–4–0.

கிடைக்குமிடம்— மானேஜர், மாலோல முத்ராலயம், 30, பனகல் தெரு, திருவள்ளூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 12 } விஜய ஸ்ரீ சித்திரை மீ { ஸஞ்சிகை 4

'அஹோபிலே காருடசைலமத்யே

க்ருபாவசாத் கல்பித ஸந்நிதானம் ।

லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்

லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।

ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் வைபவம்

ஸ்ரீ திருமங்கையாழ்வார் சோழநாட்டில் திருவாலி, திருநகரி என்கிற திவ்யதேசங்களுக்கு ஸமீபத்திலிருக்கும் திருக்குறையலூர் என்கிற க்ராமத்தில் சோழராஜனுக்கு ஸேநாபதியாகவிருந்த நான்காவது வர்ணத்தைச் சேர்ந்த கள்ளர் என்கிற குலத்தில் நீலன் என்பவருக்குக் குமாரராய் கலியுகம் 398-வது நள-வது கார்த்திகை-மீ பௌர்ணமி திதி வியாழக்கிழமை க்ருத்திகா நக்ஷத்ரத்தில் அவதரித்தார். இக்காலத்திலும் சோள தேசத்தில் கள்ளர் குலத்தில் ஸேநாபதி என்கிற ஓர் வகுப்பு ப்ரஸித்தமாகக் காணப்படுகிறது.

அநுப்ரவேசாவதாரம்

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் 'ஸம்பவத் அபிநவாதிஷு ஸ்ரீமத்தேஷு தேஷு தேஷு ஜநௌக: | ஜந்மாந்யஸ்ய ஜகத்தே யதீஶஹிதகாம்யத: ||' என்கிறபடியே பராங்குச பரகால திருபத்தாலே அபிநவமாகவொரு தசாவதாரம் பண்ணி' என்று அருளிச்செய்திருப்பதால் பரகாலன் என்கிற திருமங்கையாழ்வாருடைய அவதாரத்தை ஸர்வேச்வரனுடைய அநுப்ரவேச தசாவதாரங்களில் களில் ஒன்றாகக் குறிப்பிட்டிருப்பதோடு 'மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்குமதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியும்' என்கிற ஸூக்திகளினால் இவ்வாழ்வார் இவ்வுலகத்திற்குச் செய்தருளின மஹோபகாரத்தையும் அருளிச்செய்திருக்கிறார். 'வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன்' என்றும் குறிப்பிட்டருளிச் செய்திருக்கிறார்.

அவதார தேசமஹிமை

ஸ்ரீபாகவதம் ஸ்கந்தம் 11-5-38-39-ல் 'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: | க்வசித் க்வசித் மஹாராஜ த்ரமிடேஷு ச பூரிஶ: ||' என்று இக்கலியுகத்தில் ஸ்ரீமந்நாராயணபராயணர்கள் பெரும்பாலும் அவதரிக்குமிடம் தமிழ்நாடென்றும் அதிலும் 'காவேரீ ச மஹாபாகா' என்று கங்கையிற் புனிதமாயக காவிரி நதியானது 'காவேரீ தோயஸம்ஸ்ப்ருஷ்டவாதோ யத்ர ப்ரவர்த்ததே | தத்ரைவ வாஸிநாம் முக்தி: கிம் புந: தத்தீரவாஸிநாம்' என்கிறபடியே தீர்த்தமஹிமையாலே ஸர்வ மனிதர்களுக்கும் பரமபக்தியை உண்டாக்கி நித்ய நிரதிசய மஹாநந்த ரூபமான மோக்ஷத்தைக் கொடுக்கையாலே 'மஹாபாகா' என்று வேதவ்யாஸமஹர்ஷியினால் மற்றை நதிகளைக்காட்டிலும் அதிக மஹிமையுள்ளதாக குறிப்பிட்டுக்கொண்டாடப்பட்டிருப்பதினால், இத் திருமங்கையாழ்வாருடைய அவதாரஸ்தலமான காவிரிதீரமானது இக்கலியுகத்தில் ஆர்யாவர்த்தாதி புண்யக்ஷேத்ரங்களுக்கு ஸமானமாகச் சொல்லப்பட்ட தமிழ்நாட்டிற்குள்ளும் மஹத்தரமான புண்யபூமியாகச் சொல்லப்பட்டதாகிறது.

இதுநிற்க, 'யதி ஶக்தி: க்ஷணார்த்தம் வா விஷ்ணோராயதநே வஸேத் | ந ஶக்தி: க்ஷணார்த்தம் வா விஷ்ணோராயதநே வஸேத்' என்றும் 'நின் கடைத்தலை இருந்துவாழும் சோம்பரை உகத்தி போலும்' என்றும் சொல்கிறபடியே இவ்வாழ்வாருடைய அவதாரஸ்தலம் திருவாலி திருநகரி என்கிற திவ்யதேச ஸமீபதேசமாகையினாலும் அது ஸர்வோத்க்ருஷ்ட புண்யக்ஷேத்ரமாகிறது.

இங்கு 'நிக்ருஹீதேந்த்ரியக்ராமோ யத்ர யத்ர வஸேந்நர: | தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிஶம் புஷ்கரம் ததா ||' என்கிறபடியே ஆழ்வார் வஸிக்கிறவிடமே ஸகல புண்யக்ஷேத்ரமாகிறது என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை ஸ்ரீ தேசிகன் 'தேனார் கமலத்திருமகள் நாதன் திகழ்ந்துறையும்' என்கிற பாசுரத்திலருளிச் செய்திருப்பது அநுஸந்தேயம்.

திருமங்கையாழ்வார் திருநாமங்கள்

திருமங்கையாழ்வார் சோழராஜனுடைய ஸேநாபதியாய் யுத்தபூமியில் பற்பல போர் வீரர்களை ஜயித்தபடியினாலே 'மருவலர்தம் உடல் துணிய வாள் வீசும் பரகாலன்' என்று தாமருளிச் செய்தபடியே சத்ருக்களுக்கு யமன்போல் இருந்ததால் 'பரகாலன்' என்கிற திருநாமத்தோடும், இவ்வாழ்வாருடைய சூரத்தன்மைக்கு ஸந்தோஷித்து சோழராஜனால் கொடுக்கப்பட்ட 'மங்கை' என்கிற தேசத்திற்குச் சிற்றரசனாயிருந்ததினாலே 'கண்டல்வேலிமங்கைவேந்தன்' 'வாரணங்குமுலைமடவார் மங்கைவேந்தன்' (பெ,தி.1-3-10) என்று தாமருளிச்செய்தபடியே திருமங்கைமன்னன் என்கிற திருநாமத்தோடும், 'கலயாமி கலித்வம்ஸம்' என்கிறபடியே கலியுகத்தின் தோஷங்களை நாசம் பண்ணினவராகையினாலே 'வேல்வலவன் கலிகன்றி விரித்துரைத்த' என்று தாம் அருளிச்செய்தபடியே 'கலிகன்றி' என்கிற திருநாமத்தொடும், இவ்வாழ்வார் ஸர்வேச்வரனுடைய திருவடி விரலிலிருந்த மோதிரத்தைக் கையினால் கழற்றமுடியாதபோது தமது பற்களால் விரலைக் கடித்து மோதிரத்தைக் கழட்டினதைப் பார்த்த ஸர்வேச்வரன் இவன் 'நம் கலியனோ' என்று அருளிச்செய்ததினாலே 'கலியன்' என்கிற திருநாமத்தோடும் 'நீலன்' என்கிறவருக்குக் குமாரராய் அவதரித்ததோடு தாமும் நீலவர்ணமான திருமேனியோடு இருந்ததால் 'நீலன்' என்கிற திருநாமத்தோடும் எழுந்தருளியிருந்தார். இத்திருநாமங்கள் இவ்வாழ்வாருடைய கல்யாண குணங்களின் பெருமையைச்சொல்லுகின்றன. இங்கு பெரியதிருமொழி 3-4-10ல் 'ஆலிநாடன் அருள்மாரி யரட்டமுக்கி யடையார்சீயம் கொங்குமலர் குழலியர்வேள்மங்கை வேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன' என்று தம்மாலேயே அருளிச்செய்யப்படுகிற கல்யாணகுணங்களும் அநுஸந்திக்கத்தக்கவைகள்.

திருமங்கையாழ்வார் விவாஹம்

பிறகு அத்திருக்குறையலூரிலேயே தம்மோடு ஸமானவர்ணத்தையும் குலத்தையுமுடையவரான ஓர் பாகவதர் க்ருஹத்தில் ஸர்வாங்கஸுந்தரியாய் நாணம், மடம், அச்சம் முதலான கல்யாண குணஸம்பூர்ணையாயிருந்த 'குமுதவல்லி' என்கிற ஓர் கன்னிகையை விவாஹம் செய்துகொள்வதில் ஆஸ்தாதிசயத்தினால் அக்கன்னிகையினுடைய பிதாவினிடம் போய் அக்கன்னிகையைக் கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவர் 'ஒரு வருஷகாலம் தினந்தோறும் ஆயிரம் ப்ராஹ்மணர்களுக்கு அந்நதாநம் செய்கிறவருக்குத்தான் தான் வாழ்க்கைப்படுவதாக என் பெண் வ்ரதம் பூண்டிருக்கிறாள்' என்று சொல்ல, தாம் அப்படியே அந்நதாநத்தைப் பண்ணுவதாக ப்ரதிஜ்ஞைபண்ணிவிட்டு அந்த கன்னிகையை ஶாஸ்த்ரப்படி விவாஹம்செய்துகொண்டு அன்றுமுதல் அந்த ப்ரதிஜ்ஞையின்படி ப்ராஹ்மணர்களுக்கு அந்நதாநத்தைப் பண்ணிவந்தார். அதினாலேயே தம்மிடமிருந்த ஸகல சொத்துக்களும் சில மாஸங்களிலேயே செலவழிந்துபோய்விடவே தாம் பண்ணின ப்ரதிஜ்ஞையை 'ஸத்யாநுவர்த்திதவ்ய' என்கிற ஶாஸ்த்ரத்தின்படியே தவறிப்போகாமல் ரக்ஷிக்கவேண்டும் என்கிற ஆஸ்தையினால் அர்த்தார்ஜனத்துக்கு வேறு வழியில்லாமல் பலாத்காரத்தினால் பிறர் சொத்துக்களை அபஹரித்து ப்ரதிஜ்ஞை பண்ணின அந்நதாந தர்மத்தை அநுஷ்டித்து வந்தார். (அது குல ஸ்வபாவம்)

ஆழ்வார் இப்படி பிறர் சொத்துக்களை பலாத்காரமாக அபஹரித்து அந்நதாநதர்மம் செய்தது உசிதமா அல்லது அநுசிதமா என்று தார்மிகர்களான புத்திமான்களுக்கு ஸந்தேஹம் உண்டாகிறபடியினால் இவ்விஷயத்தில் ஶாஸ்த்ரஸம்மதம் எது என்பதை இங்கு வ்யக்தமாக்குகிறோம்.

ஆழ்வார் அந்நதாந தர்ம விசாரம்

இந்த விஷயத்தில் சில பெரியோர்கள்—

'யத்க்ருத்யம் தத்ஸ்வர்ணம் ஸ்வர்ணம் ஸந்ந்யஸ்'

என்கிறபடியே எந்தக்காரியம் பகவானுக்கு ப்ரியமாகுமோ அதுவே புண்ய கார்யமாகையினாலும் 'நாஹம் தயாஜ்யஜநாந ஹவிஷ்டாநே வ்யாதஸ்வ ஜதவ்யூதஸ்ந

[illegible] என்கிற பாகவதத்தில் ஸ்கந்தம் 3-16. காணப்படும் பரமைகாந்திகளான பகவத்வாக்யத்தினுல் பாகவதர்களுக்கு அந்நமிடுவது பகவானுக்கு மிகவும் ப்ரியமானதாகச் சொல்லப்படுவதாலும் '[illegible] ॥' என்கிற பாத்மோத்தர வசனம் பகவதாராதனத்தைக் காட்டிலும் பாகவதாராதனமே சிறந்ததென்று சொல்வதாலும், 'ஏத்தியிருப்பாரைவெல்லுமே மற்றவரைச் சாற்றி இருப்பார் தவம்' என்கிற நான்முகன் திருவந்தாதி 18-ம்பாசுரமும் இதை அனுவதித்து த்ருடப்படுத்துவதாலும், திருமங்கையாழ்வார் பிறர் சொத்தை அபஹரித்து பாகவத ப்ராஹ்மணர்களுக்கு அந்நதானம் பண்ணினது தர்மந்தான் என்கிருர்கள். மற்றும் சில பெரியோர்கள் ப்ராஹ்மணர்களுக்கு அந்நதானம் பண்ணுவது கீழே சொன்னபடியே பகவானுக்கு மிகவும் ப்ரியமானகார்யமானுலும் அந்த அந்நதானத்தையும் தர்மமான மார்க்கத்தினுல் ஸம்பாதிக்கப்பட்ட த்ரவ்யங்களைக்கொண்டுதான் செய்யவேண்டும் என்று பாரதம் ஆச்வமேதிகபர்வத்தில் (பக்கம் 157-ல்)

[illegible]

ஆநுசாஸநிகபர்வம் பக்கம் 482

[illegible] ॥

[ந்யாயமான மார்க்கத்தினுல் கிடைத்த ஸ்வல்ப த்ரவ்யங்களை ச்ரத்தையோடு தானம் செய்வதினுல் தர்மதேவதையானது எப்படி ஸந்தோஷத்தை அடையுமோ அப்படி ந்யாயமில்லாத மார்க்கங்களினுல் ஸம்பாதிக்கப்பட்ட அதிகங்களான த்ரவ்யங்களை தானம் செய்வதினுலும் ஸந்தோஷத்தை அடைகிறதில்லை.

அதர்மமார்க்கத்தினுலும் பணத்தில் அதிக ஆசையினுலும் அனேக மனிதர்களை ஹிம்ஸை செய்வதினுலும் கிடைத்த த்ரவ்யமானது தர்மம் செய்வதற்கு யோக்யமன்று.

பரஹிம்ஸையினுலும் திருடுவதினுலும் தயையில்லாத் தன்மையினுலும் தூர்த்தபாவத்தாலும் கிடைத்த த்ரவ்யம் தர்மகார்யத்துக்கு யோக்யமன்று. ந்யாயமில்லாதவழியினுல் ஸம்பாதிக்கப்பட்ட த்ரவ்யத்தை அடிக்கடி தானம் பண்ணினுலும் அந்த தானத்திற்கு பலன் கிடையாது] என்று ந்யாயவிருத்தமான மார்க்கத்தினுல் கிடைத்த தனங்களைக்கொண்டு தானம் செய்யக்கூடாதென்று சாஸ்த்ரங்கள் நிஷேதித்திருப்பதாலும் இது அந்நதானத்திற்கும் உபலக்ஷணமாகையினுலும் கெட்டவழியால் கிடைத்த த்ரவ்யமூலமான அந்நதானமும் புண்யமாகாது. இதைப்போலவே திருமங்கையாழ்வார் பிறர் சொத்துக்களை பலாத்காரமாக அபஹரித்ததும் பாபகார்யம்தானே என்று சிலர் நினைக்கலாம். பிறர் சொத்துக்களை அபஹரிப்பது பாபம்தான். ஆனுலும் அது திருமங்கையாழ்வார் போன்ற மஹாபுருஷர்கள் விஷயத்தில் குற்றமாகாது. ஏனென்றுல், கௌதமதர்மத்தில்—'[illegible]' என்று சொல்லியிருப்பதாலும் பாகவதத்தில் '[illegible]' என்று சொல்லியிருப்பதாலும் தபஸ் பகவத்பக்தி முதலான சக்தி விசேஷத்தையுடைய பெரியோர்கள் அதர்மமான கார்யங்களைச் செய்தாலும் அவர்கள் தபோபக்திமஹிமையினுல் அக்குற்றங்களைப் பரி

ஹரித்துக்கொள்வார்கள் ஆகையினால் மஹான்கள் செய்த குற்றங்களுக்காக அதற்கு பலமான சிக்ஷைகளை அவர்கள் அடைகிறதில்லை.

அப்படிப்பட்ட தபஸ் பக்தி முதலிய மஹிமை இல்லாத மற்றை மனிதன் அப்பெரியோர்கள் சாஸ்த்ரநிஷித்தங்களான கார்யங்களைச் செய்திருப்பதால் நாமும் சாஸ்த்ரநிஷித்தங்களான பாபங்களைச் செய்வோமே என்று நினைக்கவும் கூடாது. 'தஊநீக்ஷ்வ்ய ஹுயாஜ்ஞா நஸ்ஊதவ்வாஸ:' என்றும், 'நெதத்ஸஊ ரெஜாத ஊநஸாவி ஹ்வ்நீ-ஸ்வ:। விநஸ்வ்த்வ்ராவங்நு ஊஷ்வ்ஊவ்யா ஸ-ஷெ்ஞ்ரா ஷ்விஜம் விஷடீ' என்றும் மஹாபுருஷர்கள் செய்த பாபகார்யங்களை அம்மஹிமையில்லாத ஸாதாரண மனிதர்கள் செய்தால், சிவன் விஷத்தை புஜித்து ஜரித்துக்கொண்டதைப் பார்த்து மற்றை ஸாதாரண மனிதன் அந்த விஷத்தை புஜித்தால் எப்படி நாசத்தை அடைவானோ அப்படி மஹாநரகதுக்கங்களை அனுபவிக்கவேண்டும் என்று பாகவதத்தில் சொல்லப்படுகிறது. ஆகவே மஹான்கள் செய்த பாபகார்யங்களை மஹிமையில்லாத நாம் செய்யக்கூடாதாகையினால் திருமங்கையாழ்வார் திருடி அந்நதானம் பண்ணினதை நாம் செய்யக்கூடாதென்கிறார்கள்.

இந்த விஷயத்தில் ஸ்ரீதேசிகன் விரோத பரிஹாரம் என்கிற க்ரந்தத்தில் மநுஸ்ம்ருதி அத்-11-ல் 'யொzஸாய-ஹெவ்ரzய-ஊஊாய ஸாய-ஹ்வஸம்வ்யஹுதி। ஸக்ஷ்ரஜூாவுஊாதூ நம ஸதொரயதி தாவஹஸ॥' என்று எந்த அரசன் தர்மாநுஷ்டானமில்லாதவர்களுடைய த்ரவ்யங்களை அபஹரித்து தார்மிகர்களான ஏழைகளுக்குக் கொடுக்கிறானோ அவன் தன்னை ஓடமாகச்செய்து அவ்விருவரையும் அக்கரையேறும்படி செய்கிறான் என்றும் மஹாபாரதத்தில் 'வ்ஸஹ்வ விதாஹரணம் நகூஷ:' அரசன் தார்மிகரல்லாத தனிகர்களுடைய சொத்தை பலாத்காரமாக அபஹரித்து தர்மம் செய்வது குற்றமாகாது என்றும் சொல்லியிருப்பதாலும் திருமங்கை மன்னன் சோழராஜனால் கொடுக்கப்பட்ட சிலதேசங்களுக்கு அரசனாக இருந்தால்தான் ஒருவருஷகாலம் ப்ராஹ்மணர்களுக்கு அந்நதானம் செய்வதாகப் பண்ணின ப்ரதிஜ்ஞை ஸத்யமாக ஆகவேண்டியதை உத்தேசித்து பிறர் சொத்துக்களை அபஹரித்தது அவருக்குக் குற்றமாகாதென்று அருளிச்செய்திருக்கிறார்.

திருமங்கையாழ்வாருக்கு ஆசார்ய லாபம்

இவ்வாழ்வார் தாம் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுவதற்காக பலாத்காரத்தினால் திரவியத்தை அபஹரித்து அந்நதானம்பண்ணி வருகையில் இவ்வாழ்வாருடைய பூர்வஜந்ம ஸுக்ருதவிசேஷபரிபாகத்தினால் ஸர்வேச்வரன் இவ்வாழ்வார் மூலமாக உலகத்தை உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி மஹாலக்ஷ்மியோடுகூட ஸர்வாபரணபூஷிதனாய் ப்ராஹ்மணதம்பதிகளாய் வேஷம்பூண்டு திருமங்கையாழ்வார் அர்த்தார்ஜனத்திற்காகக் காத்திருக்கும் வழியில் வரவே ஆழ்வார் அந்த திவ்யதம்பதிகளுடைய திருமேனிகள் ஸகல திவ்யாபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக்கண்டு ஆநந்தபரவசராய் அந்த தம்பதிகளிடம் போய் அவ்வாபரணங்களைக் கழற்றிக்கொடுக்கும்படி வாள்வலிமையினால் நிர்பந்தித்து அவ்வாபரணங்களை எல்லாம் கழற்றி ஒரு மூட்டையாகக்கட்டிவைத்து அவ்வந்தணனுடைய திருவடியில் திருவிரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கைவிரலால் கழற்றிப்பார்த்துமுடியாமல்போகவே ஆழ்வார் தமது பற்களினால் விரலைக்கடித்து அம்மோதிரத்தையும் கழற்றி எடுத்துக்கொண்டு வைத்த ஆபரணமூட்டையைத் தூக்க அது தூக்கமுடியாமல் மிகவும் கனமாக இருக்க ஆழ்வார் அவ்வந்தணனைப்பார்த்து 'நீர் ஏதோ மந்திரப்ரயோகம்பண்ணிவிட்டீர். அந்த மந்திரத்தை எனக்குச்சொல்லவேணும். இல்லாவிட்டால் உங்களை என் வாளுக்கு இரையாக்குவேன்' என்று நிர்பந்திக்க ஸர்வேச்வரனும் இவ்வாழ்வாரைக்கொண்டு லோகோஜ்ஜீவனம் செய்விக்கவேணுமென்கிற திருவுள்ளத்தினாலே 'அந்த மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன் என்று சொல்லி 'ஊவொ யஜ-ஙெஷிஸாஊநி தவெ்ய வாயவ-ஊணாநி வ। ஸவ-ஊஷாக்ஷராஷஸ்வ யவூாநவ்ஊவி வாஜூயடீ' என்கிறபடியே ஸகல

வேதார்த்தங்களின் ஸங்க்ரஹரூபமாய் 'ஸர்வவேதாந்தஸாரார்த்த ஸங்க்ரஹோ ப்ருஹதோவிதம் | ஜேபந்தி முநய: ஸித்தா: யமஷ்டாக்ஷரமந்த்ரகம்' என்கிற படியே ஸர்வோத்க்ருஷ்ட பரதேவதையினுடைய ப்ரதாநமந்த்ரமாகையினலேயும் 'யோஸௌ நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் வேத ஸ்யேதிகோநஸ்யதேஸஞ்சரதி ஸர்வமாயுரேதி விந்தேத ப்ராஜாபத்யம் ராயஸ்போஷம் கௌபத்யம் ததோமுக்தத்வம் அச்நுதே இதி' என்கிற படியே அம்மந்திரத்தை அநுஸந்திப்பவர்களுக்கு ஐஹிகஸகலபலன்களையும் பரமபுருஷார்த்தமான மோக்ஷபர்யந்தமான ஆமுஷ்மிக ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடியதாகையினலே இது ஸர்வோத்க்ருஷ்டமான மஹாமந்திரமென்று நாரத மஹர்ஷியினல் சபதம்பண்ணி கொண்டாடப்பட்டதுமான திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தை ஸார்த்தகமாக உபதேசித்ததோடு இவ்வாழ்வாருக்கு நித்யமுக்தர்களுக்குப்போல ஸகல பதார்த்தங்களையும் கையிலிருக்கும் கனியைப்போலே ஸாக்ஷாத்கரிக்கும்படியான திவ்ய ஜ்ஞாநத்தையும் அநுக்ரஹித்தருளினன்.

இத் திருமங்கையாழ்வாருக்கு முன் ப்ரஹ்மதேவனைப்போலே புஷ்பங்களில் அவதரித்து 'ஸ்வயம்ஜாத விஜ்ஞாநா: நிவ்ருத்திம் ஸமாஸ்திதா:' என்று சொல்லப்பட்ட ஸநகாதிமஹர்ஷிகளைப்போலே ஸ்வத ஏவ ஸர்வஜ்ஞர்களாய் நிவ்ருத்திதர்மநிஷ்டர்களாய் மஹாயோகிகளாய் விளங்கின முதலாழ்வார்கள் முதலான மற்றும் எல்லாவாழ்வார்களுக்கும் அத்யந்ததுர்லபமான திவ்யதம்பதிகளுடைய அத்யந்தவிலக்ஷணமானவநுக்ரஹவிசேஷத்தினல் விஷயவைலக்ஷண்ய வசநவைலக்ஷண்யங்களினல் மஹாரத்நகர்ப்பமான மாணிக்கச்சொப்புப்போன்ற திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தின் உபதேசத்தையும் நித்யமுக்தாத்மாக்களுக்கு ஸமானமான ஸர்வஜ்ஞதையையும் ஸர்வேச்வரனிடமிருந்து ஸாக்ஷாத்தாகவடையும்படியான பாக்யவிசேஷம் திருமங்கையாழ்வார் ஒருவருக்குத்தான் ஸம்பவித்தது.

இதினல் 'ஆசார்யவாந் புருஷோ வேத' 'ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்' என்கிற உபநிஷத்வாக்யங்கள் பரமபுருஷார்த்தஸாதகமான வேதாந்தவிஜ்ஞாநத்தை ஸதாசார்யனுடைய ஸாக்ஷாதுபதேசமூலமாகவே ஸம்பாதிக்கவேண்டுமென்றும் 'யதா ஸூர்யஸ்ய ப்ராந்தோ ஜ்ஞேய: ஸமேநாப்ய ஸமேந வா | யதா க்ஷிதோ வா ஸ்யாத் ஆசார்யஸ்ய ப்ரசாதநோ ஷவேத ||' என்கிறபடியே வேறுவிதத்தினல் ஸம்பாதிக்கக்கூடாதென்றும் சொல்வதை அநுஸரித்து ஸ்ரீராமக்ருஷ்ணதிகள் ஸ்வத ஏவ ஸர்வஜ்ஞர்களாயிருந்தும்வஸிஷ்டஸாந்தீபிநீகளான ஸதாசார்யோபதேசமூலமாகவே ஸகலவித்யாக்ரஹணம் பண்ணினது போல திருமங்கையாழ்வாருக்கும் ஸ்வத ஏவ ஸர்வஜ்ஞனாய் ஸர்வாசார்யபரமாசார்யனை, ஸர்வேச்வரனுடைய ஸாக்ஷாதுபதேசமூலமாகவே ஸகல சாஸ்த்ரார்த்தஜ்ஞாநம் ஸம்பவித்ததால் இது ஸர்வோத்க்ருஷ்டதத்வஜ்ஞாநமாகிறது.

(தொடரும்)

ஸ்ரீ:

சக்ரவர்த்தித்திருமகன் கருணை

கருணையென்பது வடமொழியில் க்ருபா, தயா இத்யாதி சப்தங்களால் சொல்லப்படுகிற ஒரு குணவிசேஷம். இக்குணத்தைக் குறித்து ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் 'பகவானுடைய ஜ்ஞாநசக்த்யாதி கல்யாணகுணங்களெல்லாம் உன்னுடைய ஸம்பந்தத்தாலேதான் சேதனர்களை ரக்ஷிப்பதற்கு உபயோகமுள்ளனவாக வாகின்றன. உன்ஸம்பந்தமில்லாவிடில் தோஷங்களாகவே முடியும்' என்று 'வ்ருஷகிரிக்ருஹ மேதி குணாபோதபலைச்வர்ய வீர்யசக்தி ப்ரபா: தோஷாஸ்யுரேதே யதி நாம தயே த்வயா விநா ஸந்த்ருதா: ||' என்றருளிச் செய்துள்ளார்.

மேலும் அச்சதகத்திலேயே இக்குணப் பெருமையை 'அஹமஸ்ம்யபராத சக்ரவர்த்தீ கருணே த்வம் ச குணேஷு ஸார்வபௌமீ' என்பதினாலும் கூறியுள்ளார். தவிர, பகவான் அவதரித்துத் தன்னிடமிருக்குங்குணங்களால் செய்கிற கார்யங்களும், க்ருபாகார்யங்கள்தான் என்றும் அச்சதகத்திலேயே அநேக ப்ரகாரமாக அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் பகவதவதாரமும், அவதரித்துச் செய்யுங்கார்யங்களும் கருணாமூலந்தானென்று ஏற்படுகிறது. அக்கருணை ராமாவதாரத்தையுண்டுபண்ணி அவனிடத்திலிருந்துகொண்டு உலகங்களுக்குப் பண்ணின உபகாரம் எல்லா அவதாரங்களையு முண்டுபண்ணி அந்தந்த அவதாரத்திலும் இதர குணங்கள்போல் அவனிடம் பிரியாமலிருந்துகொண்டு செய்த உபகாரத்தைக்காட்டிலும் மிகவும் மேன்பட்டது என்று ஸ்ரீவால்மீகி முதலான மஹாகவிகளும், ஆழ்வாராசார்யர்களும் எடுத்துக் கூறியிருப்பதை இங்கு நிரூபிக்கிறோம்.

விபீஷண சரணாகதி.

'ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே । அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம' என்கிற ஸ்ரீ ராமபிரானின் திருவாக்கினால் ஒருக்காலே சரணமென்றடைகின்றாரை ரக்ஷிப்பதே அவனது முக்ய வ்ரதமென்றேற்படுகிறது. அந்த ரக்ஷணம் தன்னிடத்திலிருக்கிற பலத்வாதி குணங்களாலேற்பட்டிருந்தபோதிலும் மேற்கூறியபடிக்கு அந்த ரக்ஷணத்திற்கு தயையே முக்யகாரணமென்றும் ஏற்படுகிறது. தவிர, வேதாந்தவாசிரியன் முனிவாஹனபோகமென்கிற ரஹஸ்யத்தில் முதற்பாட்டான அமலனாதிப்பிரானுக்கு அர்த்தம் செய்தருளி கடைசியில் அப்பாட்டால் பகவானுடைய அநேக கல்யாண குணங்களை ஆழ்வாரநுபவிக்கிறாரென்று ஸாதித்துக்கொண்டுவருகையில் க்ருபாவத்வமும் அதில் ஒன்று என்று பரிகணனம்பண்ணிவிட்டு எல்லா குணங்களின் காஷ்டாக்ரமத்தை நிரூபித்துக்கொண்டுவருகிறபோது க்ருபாகாஷ்டையாவது என்று எடுத்துக்கொண்டு சத்ருவினுடைய ஸம்பந்திகளுங்கூட த்யாஜ்யம் என்ற பரிவர்முன்னே 'சத்ருதானுமிசையில் ஸ்வீகரிப்பேன்' என்று எதிர்பேசும்படியான இரக்கத்தை உடையனாய் அவர்கள் தாங்களுமிவனைக் கைக்கொள்ளும்படி பண்ணுகை' என்று அருளிச்செய்ததிலிருந்தும் மஹாராஜன் முதலானவர்கள் 'விபீஷணன் ஸர்வப்ரகாரத்தாலும் பரிக்ராஹ்யனல்லன்; இவனை பரிஹக்ரஹித்தால் நமக்குக் கெடுதல் நேரிடும்' என்று அனேகவிதமாக ஸ்ரீ ராமசந்த்ரனிடத்தில் விண்ணப்பம் செய்ததின்பேரில் அதற்கு ஸ்ரீ ராகவன் 'ஸுதுஷ்டோ வாப்யதுஷ்டோ வா கிமேஷ ரஜநீசர: ஸூக்ஷ்மமப்யஹிதம் கர்த்தும் மமாசக்த: கதஞ்சந' என்றும் 'பிசாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந் அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம் இச்சந் ஹரிகணேச்வர' என்றும் 'தேவேஷ்வபி ஹரிச்ரேஷ்ட ததேவாஹ்யபயம் மயா' என்றும் தன்னுடைய பரத்வஸர்வசக்தித்வாதிகளை ஆவிஷ்கரித்து அவனை ஸ்வீகரித்தபோதிலும் அந்த ஸ்வீகாரம் ராமசந்த்ரனின் க்ருபையினுடைய உச்சநிலையினாலேதான் என்று ஏற்படுகிறது. 'யதி வா ராவண: ஸ்வயம்' என்றல்லவோ அவனருள் இருந்தபடி.

குஹப்பெருமானோடு தோழமை கொண்டதும் க்ருபாகார்யம்

'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்

பொய்யோவெனுமிடையாளொடு மிளையா னொடும் போனான்
மையோ மரகதமோமறிகடலோ மழைமுகிலோ
வையோ விவன்வடிவென்பதொ ரழியா வழகுடையான்.

(அ. கா. கங்கைப்படலம். பாட்டு 1)

என்று கவிசக்ரவர்த்தி கம்பர் கூறியபடி மூவருமாக கோசலதேசத்தின் மருதநிலங்களின் வளங்களைக் கண்டவண்ணம் அந் நாட்டைக் கடந்து கங்கைக்கரையை அடைந்து அங்கேயுள்ள தவசியர் வந்து உபசரிக்கக் கங்கையில் நீராடிச் செய்கடன் முடித்து அம் முனிவரிட்ட காய் கிழங்கு முதலியனவுண்டு பர்ணசாலையில் மகிழ்ந்திருக்கையில், கங்கை இருகரையுந் தனக்குச் சொந்தமாகவுடையவனும் சிருங்கிபேரபுரத்திற்கரசனுமான குஹப் பெருமான் ராமபிரான் வந்துள்ளதைக் கேள்வியுற்று '[illegible]' என்றிருக்கிறபடியால் அவனுக்குக் கிடைத்த ஊனையும் தேனையும் கையிலேந்தித் தன் பரிவாரங்களோடு அங்குவந்து இளையபெருமாள் மூலமாகத் தான் வந்ததை ராகவனுக்கு அறிவித்ததையும், அநுமதி பெற்று பெரியோர்களிடத்தில் எப்படிப் போகவேண்டுமோ அதன்படிக்கு பரிவாரங்களை நிறுத்திவிட்டுத் தான் மாத்திரம் உட்புக்கு அடிவணங்கிக் காணிக்கைப் பொருளை ஈய அதைக் சொள்ளாது ஸ்ரீராமன் முதிர்ந்த தபஸ்விகளைப் பார்த்து புன்னகை புரிந்ததையும் காணிக்கைப்பொருளைப் பெற்றார்போல் மகிழ்ந்தேன் என்று ஸ்ரீ ராமசந்த்ரன் கூறியதையும் கம்பர்—

'நிற்றியீண் டென்றுபுக்கு நெடியவற்றொழுது தம்பி
கொற்றவ நின்னைக்காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானுமுள்ளந் தூயவன்றாயினல்லன்
எற்று நீர்க்கங்கை நாவாய்க் கிறைகுக னொருவ னென்றான்.

(அ. கங்கைப்படலம் 40)

அண்ணலும் விரும்பி யென்பா லழைத்தீ யவனை யென்னப்
பண்ணவன் வருக வென்றான் பரிவினன் விரை விற்புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக் களித்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனிவளைத்து வாய் புதைத்து நின்றான்.

(அ. கங்கைப்படலம் 41)

இருத்தியீண் டென்னலோடு மிருந்தில னெல்லை நீத்த
வருத்தியன் றேனுமீனு மமுதினுக் கமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தே னென்கொ றிருவுள்ளமென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

(அ. கங்கைப்படலம் 42)

அரியதா முவப்ப வுளளத் தன்பினா லமைந்த காத
றெரிதாக் கொணர்ந்த வென்றா லமிழ்தினுஞ் சீர்த்தவன்றே
பரிவினிற்றழீ இய வென்னிற் பவித்திர மெம்மனோர்க்கு
முரியன வினிதினாடு முண்டனெமன்றே வென்றான்.

(அ. கங்கைப்படலம் 43)

என்கிறார்.

மேலும் ராகவன் 'நாங்கள் இங்குதங்கி நாளை கங்கையைக் கடக்கக் கருதியுள்ளோமாதலால் நீ உன் பரிஜனத்தோடும் நின் ஊருக்கு மீண்டு நாளை விடியில் ஓடத்தோடும் வருக' வென்று நியமிக்க அதற்குக் குஹன் 'அரசகுமாரனை உன்னை பீதாம்பரமணிந்து மணிமுடியைப் புனைந்த கோலத்தோடும் தரிசிக்கவேண்டியிருப்பதாகவிருக்க அங்ஙனம் ஸேவிக்கப் பெறாமல் இந்தத் தவக்கோலத்தைக் காணுமாறு நேர்ந்த தீவினைக்காக என் கண்களைப் பிடுங்கி எறிவேனாயின் நான் உன்னிடத்தே மெய்யன்புடையவனென்று சொல்லலாம். அப்படிச் செய்யமாட்டாத யான் அன்பன் என்பது கபடமே. ஆயினும் உனக்கு நேர்ந்துள்ள நிலைமையை உத்தேசித்து உன்னைப் பிரிந்து ஊருக்குச்செல்ல மனந்துணிந்திலேன். தாஸனாலியன்ற அடிமையைச் செய்யவிரும்பு

கின்றேன்' என்று விண்ணப்பித்ததைக் கவிச்சக்ரவர்த்தி கம்பர்—

'கார்குலாநிறத்தான் கூறக் காதலனுணர்த்து வானிப்
பார்குலாஞ்செல்வ நின்னை யிங்ஙனம் பார்த்த கண்ணை
யீர்கிலா கள்வனேன்யா னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னுனதைய செய்குவெனடிமை யென்றான்.

(அ. கங்கைப்படலம் 45)
என்கிறார்.

அப்பொழுது கோதண்டமென்னும் வில்லை யேந்திய நரச்ரேஷ்டனான ஸ்ரீ ராமசந்த்ரன் 'நவ வீதா கூயாஹீநா நவா ஹ உவி ரோவவ! உைஹா்ேதடீவி ஜீவாவொ ஜயாநத ாவிவொஷூூ தள!' என்று கூறின நீங்கள் என்னிடத்திலெவ்வளவு பக்தி பூண்டவர்களோ அதேமாதிரி குஹனும் என்னிடத்தில் பக்தி யுடையவனென்று ஜானகி திருமுகத்தையும் இளையபெருமாளுடைய முகத்தையும் பார்த்து அந்த குஹன் விஷயத்தில் கொண்ட தயை யினால் மலர்ந்த திருக்கண்களையுடையவனாய் 'யாதினும்மேம்பட்ட தோழனே! இன்றைய தினமிவ்விடத்தில் எம்மோடிருப்பாயாக' வென்று நியமித்ததை கம்பநாட்டாழ்வார்—

'கோதை விற்குரிசி லன்னான் கூறியகொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதலனாகுமென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினுமினிய நண்ப விருத்தி யீண் டெம் மொடென்றான்'

(அ. கா. கங்கைப்படலம் 46)
என்றார்.

பிறகு அன்றிரவு அங்கு தங்கி இளைய பெருமாளோடுகூட ஸ்ரீராகவனை பாதுகாத்தா னென்பதையும் மஹாகவி கம்பர்—

'தும்பியின் குழாத்திசுற்றுஞ் சுற்றத்தன் றெடுத்த வில்லன்
வெம்பி வெந்தழியாகின்ற நெஞ்சினன்விழித்த கண்ணன்
றம்பி நின்றானை நோக்கித் தலைமகன் றன்மை நோக்கி
யம்பின் றலைவன் கண்ணீரருவிசோர் குன்றி னின்றான்'

(அ. கா கங்கைப்படலம் 54)
என்றார்.

பிறகு கங்கையைக் கடக்கும்போதும் கடந்த பிறகும் ஸ்ரீராமசந்த்ரனிடத்தில் 'எல்லா ஸௌகர்யங்களையுஞ் செய்துதர சித்தனாக விருக்கிறேன்' என்று குஹன் ப்ரார்த்திக்க அதற்கும் ஸ்ரீராமசந்த்ரன் அவனிடம் தோழமை பாராட்டி நானும் என்னுடையது மெல்லாம் உன்னுடைய வேலைக்கு ஸாதனங் களாகத்திருவுள்ளம்பற்றவேண்டுமென்றுபக்தர் கள் அவனை ப்ரார்த்திப்பதுபோல அந்தக் குஹனைப்பார்த்துக் கூறியதைக் கம்பர்—

'அன்னவனுரைகேளா வமலனு முரை நேர்வா
னென்னுயிரனையாய் நீயிளவலுனிளையானிந்
நன்னுதலவணின்கே ணளிர்கடனிலமெல்லா
முன்னுடையது நானுன் றொழிலுரிமையி னுள்ளேன்'

(அ. கா. கங்கைப்படலம் 73)
என்கிறார்.

ஸ்ரீராமனது கருணைத் திறத்தை வியன் றன்றோ திருமங்கைமன்னனும்—

'ஏழையேதலன் கீழ்மகனென்ன திரங்கி மற்றவர்க்கின்னருள் சுரந்து
மாழைமான்மடநோக்கி யுன்றோழி யும்பி யெம்பி யென்றொழிந்தில யுகந்து
தோழனீயெனக் கிங்கொழியென்ற சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட
வாழிவண்ண நின்னடியிணையடைந்தே னணி பொழில் திருவரங்கத்தம்மானே'

(திருமொழி 5—8—1)
கூறியுள்ளார்.

மேலும் ஸ்ரீராகவன் குஹனைப் பார்த்து நாம் எப்போதும் சேர்ந்துகொண்டு அநுப விக்குமின்பத்தைக் காட்டிலும் பிரிந்து கூடியதிலேற்படுமின்பம் மிகவும் மேம்

199537

பட்டது. ஆகையால் இப்பொழுது நீ நினைக்கவேண்டியது யாதெனில்: முன்பு தசரத சக்ரவர்த்திக்கு நான்கு பிள்ளைகள்; இப்பொழுது நம்மையும் சேர்த்துக்கொண்டதால் ஐவரானோமென்பதே என்று நியமித்ததைக் கம்பர்—

'துன்புளதெனினன்றோ சுகமுளததுவன்றிப்
பின்புளதிடைமன்னும் பிரிவுளதெனவுன்
னேன்
முன்புளமொரு நால்வே முடிவுளதெனவுன்னு
வன்புள வினிநாமோ ரைவர்களுளரானோம்'

(அ. கா. கங்கைப்படலம்-74)

என்கிறார்

'ஸஜாஹ்யாம் ஸாயஸ்வீநாஹ்யாம் வீஜயநாகூ்யேஷவீஸ' என்கிற ஸ்ரீமத்ராமாயண வாக்யத்தால் அந்த குஹனுடைய ஸம்ச்லேஷாதிகள் 'ஜஹதோ நீவெஸஹ நீலரெண ஸம்ச்லேஷரூபமான ஸௌசீல்யத்தின் கார்யங்களென்று ஏற்படுகிறது. மேலும், வேதாந்த தேசிகன் ரகுவீரகத்யத்தில் 'நிஷாதராஜஸௌஹ்ருதஸூசித ஸௌசீல்யஸாகர' வென்று அருளிச்செய்திருப்பதாலும் அவைகள் ஸௌசீல்யகார்யங்கள்தானென்றும் ஏற்படுகிறது. ஆனாலும் நம் தூப்புல் வள்ளலே தயாசதகத்தில் 'நிஷாதாநாம் நேதா கவிகுலபதி: க்வாபி சபரீ' யென்று குஹன் விஷயமாகவும் ஸ்ரீராமன் செய்தது எல்லாம் தயாகாரியமேயென்றருளிச்செய்திருப்பதாலும் மேற்கூறியபடிக்கு பகவதவதாரம் முதற்கொண்டு எல்லாம் க்ருபாகார்யமென்று தோன்றுகிறபடியாலும் ஸௌசீல்யம் மூலமாக அந்த குஹஸம்ச்லேஷாதிகளுக்கு தயையே முக்யகாரணம் என்பதற்குத் தட்டில்லை. ஆகையால் மேற்கூறிய ப்ரமாணங்களுக்கு ஒருவித பாதகமுமில்லை. மஹாகவி கம்பர் திருமங்கைமன்னன் இவர்கள் பாசுரங்களால் ஸாக்ஷாத்தாகவே குஹப்பெருமானது தோழமை முதலானதற்குக் கருணைதான் காரணமென்று அறியப்படுகிறது. ஆக ஒரு வேடனைப்பார்த்து ஸர்வஸ்வமும்நீதானென்று சொல்வதற்கும் ஒரு குரங்கை சரணடைந்ததற்கும் மற்றொரு குரங்கை 'வஷஸ்வஸ்வ ஹதொ ஜெ வரிஷ்ஜோ ஹநஜிதஃ' என்று ஆலிங்கனம் செய்துகொள்வதற்கும் காரணம் ஸ்ரீ ராமசந்த்ரனுடைய கருணையே தானென்று சொல்வதற்கு ஒரு குறையுமில்லை. நம்மாழ்வாரும் ஸ்ரீ ராமசந்த்ரனுடைய கருணையிலீடுபட்டன்றோ.

'கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியொன்
றின்றியே
நற்பாலயோத்தியில்வாழுஞ் சராசரம்முற்றவும்
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற
நாட்டுளே'

—(திருவாய்மொழி 7-5-1)

என்றும் 'தயரதற்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே' யென்றுங் கூறியுள்ளார்.

காகாஸுர ஸம்ரக்ஷணம்

சித்ரகூடபர்வதத்தில் ஸ்ரீ ராமசந்த்ரனும் ஜானகியும் ஏகாந்தமாகவிருக்கும் ஸமயத்தில் இந்த்ரன் மகன் ஜயந்தனென்பவன் ஸீதாப்பிராட்டியின் அழகைக் கண்டு மோஹித்து அவளைத் தொடவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தையுடையவனாய்த் தன் ஸ்வரூபத்தை மறைத்துக் கபடமான காக்கை வேடத்தைப் பூண்டுகொண்டுவந்து ஜானகியின் மடியில் ஸ்ரீராமசந்த்ரன் பள்ளிகொண்டிருக்கையில் லோகமாதாவென்றறியாதே ஸீதையின் திருமார்பில் மூக்கினால் குத்த அப்போதே ஸ்ரீராமன் உணர்ந்து அதிகோபங்கொண்டு ஒரு தர்ப்பைப்புல்லையெடுத்து அதில் ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் ப்ரயோகித்து அதனை அக்காகத்தின்மேல் மந்தகதியாகச் செலுத்திவிட அந்த தர்ப்பாஸ்த்ரமும் பின்தொடர்ந்து செல்ல அந்த காகம் அந்த அஸ்த்ரத்திலிருந்து தப்ப வழிதேடிப் பலவிடங்களிலும் ஓடிச்சென்று சேர்ந்தவிடத்துமொருவரும் மேற்றுக்கொள்ளாமையாலே மீண்டு 'ஸ விதூய வரித்ய்கதஃ ஸபிதெஷூ ஸஜஹஷிபிஃ। தீநொகாநஜலிக்ருதஸ்தமெவ சரணம் மதஃ॥' என்கிறபடியே அந்த ராமசந்த்ரனையே சரணடைய கருணாமூர்த்தியான ஸ்ரீராகவன் 'வயாஹஷ்லெவ காகஷூத்ஃ

க்ருவயா வய-ிவாஜயஸ' என்கிறபடி அக் காகத்துக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து அஸ்த்ரம் வீண்போகாம லிருப்பதற்காக அக் காக்கையின் ஒரு கண்ணைமாத்திரம் அந்த அஸ்த்ரத்திற்கிரையாக்கினர். அந்த அஸ்த்ரம் சென்ற வேகத்தையும் அக்காகம் எல்லா இடங்களிலுமோடினதையும் அங்கு இரக்ஷகனில்லாமல் மீண்டும் ஸ்ரீராகவனையே ஶரணடைந்ததையும் பிறகு அவன் உயிரளித்ததையும் மஹாபாகவதோத்தமரான பிள்ளைப் பெருமாளையங்கார்

‘மாகம் பிலந்திக்கிமையோருலகமமுழுவுடையோ
ளுக நன்னுளடவாகப் பன்னுகநடுங்கவப்பு
வேகங்கொடுதொடரப் பறந்தோடியுமீண்டு
வந்து
காகஞ்சரணென்ன நம்பெருமாளுயிர் காத்த
னரே’
(திருவரங்கத்துமாலை -40)
என்று வர்ணிக்கிறார்.

பெரியாழ்வாரும்—
‘சித்திரகூடத் திருப்பச் சிறுகாக்கைமுலை
தீண்ட
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகுந்
திரிந்தோடி
வித்தகனே இராமாவோ நின்னபயமென்
றழைப்ப
அத்திரமே யதன் கண்ணை யறுத்ததுமோ
ரடையாளம்’
(பெரியாழ்வார் திருமொழி 3-10-6)
என்றார்

கம்பரும்—
‘அங்கதஞ்சி நடுங்கியயன்பதியன்மி
இங்குநின்வர வென்ன வெனக்கனல்வெய்த
மங்கை பங்கனொ டெண்டிசையுஞ்செல
மற்றோர்
தங்க டங்களிடங்கண் மறுத்தமைதைப்பாய்’
(சு. கா. சூடா. படலம் பா-78)

‘ஐயநின் சரணஞ் சரணென்றவணஞ்சி
வையம் வந்து வணங்கிட வள்ளன்மகிழ்ந்தே
வெய்யவன் கணிரண்டொடு போகெனவிட்ட
தெய்வவெம்படையுற்றுளதன்மைதெரிப்பாய்’
(சு. கா. சூடா. படலம் பா-80)
என்கிறார்

இந்தக்காகத்திற்கும் இராவணனுக்கும் ஒருவித வாசியில்லாவிட்டாலும் சரணமென்று வந்தடைந்த மாத்திரத்தாலேயேயிவன் ரக்ஷிக்கப்பட்டான். இராவணனும் வந்து சரணமென்று ஒருக்கால் சொன்னமாத்திரத்தில் அவனையும் ரக்ஷிப்பேன் ‘யதி வா ராவணஸ்ஸ்வயம்’ என்றல்லவோ அவனருளிருந்தது.

ஸேதுநிர்மாணம்

தயாதேவி, ஸ்ரீராமசந்த்ரனையவதரிப்பித்து அவன் மூலமாகச் செய்த கார்யங்களுள் சில இதர அவதாரங்களுக்கு சாதாரணமாகயிருந்த போதிலும் ராமாவதாரத்தில் மற்றஅவதாரங்களைக் காட்டிலும் விசேஷித்துச்செய்தகார்யம் ஸேதுபந்தனமே. விச்வாமித்ரர் யாகஸம்ரக்ஷணம் முதற்கொண்டு கடைசியாகத் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளுகிறபர்யந்தம் செய்த கார்யங்கள் அக்காலத்திலிருந்த ஜனங்களுக்கு மாத்திரம் பயன்பட்டனவேயொழிய பிறகு ஜனித்தவர்களுக்கு உபகாரகங்களாயில்லையென்னுங்குறையும் இந்த அவதாரத்தில் இல்லாமலிருப்பதற்காக இவன்மூலமாக ஸேதுநிர்மாணஞ்செய்தாளென்பதை ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தயாசதகம் 9-வது தசகத்தில் எல்லா அவதாரங்கள்மூலமாகத் தயையைக் கொண்டாடுகிற ப்ரகரணத்தில் ‘க்ருவெகூர்த ஜமஸிதெ க்ருவணஜநாவிஹொரிணெ ரஸோ- ஸஹவரஜரா ரவாயாரீணயஜ்யா க்வயா । வ்யஜ்யத ஸ்விதீஸ்ஸ்க்ருதவெக்ஷணாத்க்ஷ- ணாத்க்ருஷ வஹாவாதக வ்யுஶரஹெதவா- நா ஸெதவா நா’ வென்றருளிச்செய்துள்ளார். ‘ஸெதவும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய ப்ரஹ்- ஹத்யாம் வ்யபொஹதி’ என்கிறபடியே கற்பகோடிகாலம் வரையிலுள்ளஜீவன்களுக்கும் ஒரு தடவை பார்த்தமாத்திரத்தாலேயே ப்ரஹ்மஹத்யாதி பாபங்கள்போய் மோக்ஷாந்த ஐச்வர்யம் வருவதற்குக் காரணமென்று ஏற்

(தொடர்ச்சி 115-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம்

(12-வது ஸம்புடம் 2-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமி

இந்த ஸ்வாமி நம் தூப்புல் நிகமாந்தமஹா தேசிகனின் சிஷ்யர்களில் ப்ரதாநமாயுள்ளவர். இவரும் நம்முடைய ஆசார்யபரம்பரையில் வந்துள்ளார். இவர் ஓர் புரட்டாசித் திருவோணத்தில் திருவவதரித்தார். இவர் ஸ்வாமியின் அடிபணிந்து உயந்தவர். இவருக்கு பேருளாள ஜீயர் என்றும் திருநாமம் வழங்கும். இவர் கொஞ்சநாள் கழித்து துரீயாச்ரமத்தில் புகுந்தார். இவரை ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஒருதரம் காஞ்சியில் வாதிகளை ஜயிக்க அனுப்பியபோது இவர் அவர்களோடு வாதம் புரிந்து அவர்களை ஜயித்துத் திரும்பி ஸ்ரீஸ்வாமி திருவடிகளில் பணிந்துநின்றதும் ஸ்ரீஸ்வாமி தேசிகன் திருவுள்ளமுகந்து இவருக்கு பர்யாய பாஷ்யகாரர் என்றும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரர் என்றும் திருநாமங்களையிட்டார் இவர் பகவத் விஷயத்தை மட்டும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் திருக்குமாரராகிய நயினாராசார்யரிடம் காலக்ஷேபம் செய்தார். ஆசார்யனுடைய புத்ராதிகளும் நமக்கு உத்தேச்யம் என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை இவர் அநுஷ்டித்துக்காட்டினபடி. இவர் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் விஷயமாக ‘ராமாநுஜ தயாபாத்ரம்’ என்கிற தனியனையும் ஸ்ரீஸ்வாமி தேசிகனின் குமாரராகிய வரதாசாரியரின் விஷயமாக ‘ஸ்ரீக்ருஷ்ணயோமீந்த்ரு லீலாஜு விஜயஜ்ஜு’ என்கிற தனியனையும் செய்தார். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அந்திமதசையில் தாம் ஆராதித்துவந்த ஹயக்ரீவமூர்த்தியை இவரிடம் எழுந்தருளப்பண்ணிவைத்ததாகச் சொல்லப்பட்டுவருகிறது.

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி திருநாராயணபுரத்தில் கிடாம்பி ஸ்ரீகேசவாசார்யர் என்கிற மஹானுக்கு திருக்குமாரராக புரட்டாசித் திருக்கேட்டையில் அவதரித்தார். தம்முடைய திருத்தகப்பனாரிடத்திலேயே பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற்று திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களையும் அதிகரித்தருளினார். பால்யத்திலேயே இவர் அதிமேதாவியாய் விளங்கினபடியால் இவர் தகப்பனார் இவரை கடிகாசதம் அம்மாளென்று திருநாமத்தை யுடைய வரதவிஷ்ணவாசார்யர் திருவடிகளிலே ஆச்ரயிக்கும்படி நியமித்தார். அப்படியே இந்த ஸ்வாமியும் கடிகாசதம் அம்மாள் திருவடிகளில் ஆச்ரயித்து ஸகல வேதாந்தார்த்தங்களையும் பெற்று மஹாப்ரஸித்தராய் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஸ்ரீமதஹோபிலத்தில் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் இவருடைய ஸ்வப்நத்தில் தோன்றி அஹோபிலத்திற்கு வரும்படி நியமிக்க, அப்படியே இவரும் அங்கு எழுந்தருளி ஒன்பது ந்ருஸிம்ஹமூர்த்திகளையும் ஆராதிக்க அப்போது ஸ்ரீ ந்ருஸிம்ஹனே ஒரு யதிரூபியாய் எழுந்தருளி இவருக்கு ப்ரேஷமந்த்ரத்தை உபதேசித்து துரீயாச்ரமத்தையும் (ஸந்யாஸாச்ரமம்) யதாக்ரமமாய் பண்ணுவித்தருளினார். பிறகு அங்கு கோயில்கொண்டிருக்கும் ஒன்பது ந்ருஸிம்ஹமூர்த்திகளையும் ஒருநாள் ஆராதித்துத் தம்முடைய யாத்ரையில் எந்த ந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக்கொள்வது என்று யோசித்து நிற்குமளவில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் இவர் திருக்கைகளில் எழுந்தருள உடனே அம்மாலோலனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு திவ்யதேசங்கள் தோறும் யாத்ரையாகச் செல்லுமளவில் அங்கங்கேயுள்ளவர்கள் இந்த மஹதாசார்யனின் அருளைப்பெற்று ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளைப் பணிந்து உய்ந்தார்கள். எம்பெருமான் அநேக விபவாவதாரங்கள் செய்தருளி தம்முடைய அழகையும், குணங்களையும், வீர்யத்தையும் காட்டி சேதநர்களை வாரிப்பிடியாக எடுத்துக்கொண்டுபோனதுபோல் இங்கும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அர்ச்சையாக நின்று தம்முடைய திருமேனியின் அழகையும் குணங்களையும்காட்டி இந்த ஆசார்யவள்ளலின்

முகமாக சேதநர்களை உஜ்ஜீவித்தருளினன். 'மம ஸௌஹார்தவாமதள' என்று மாலாகாரன் என்பானொருவன் மனிசர்க்குத் தேவர்போல தேவர்க்கும் தேவனான கண்ணன் ஒரு மூலையில் உள்ள தன்னுடைய குடிசைக்கு எழுந்தருளி தன்னை அநுக்ரஹித்ததைக் கண்டு உள்ளம் உருகினாற்போல் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் க்ராமங்தோறும், அதிலும் ஒவ்வொரு குடிசைகளிலும் புகுந்து தம்முடைய அழகைக் காட்டி அங்குள்ள ஜீவராசிகளின் நலனென்ன, நிற்றலென்ன, சிந்தையென்ன, விளையென்ன, இவைகளெல்லாவற்றையும் தன் வசமாக்கிக் கொண்டு அந்த ஜீவன்களையும் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு எழுந்தருளுவதை நாம் அநுபவிக்கும்போது நாமும் நீராய் அலைந்து கரையவேண்டியதுதான். இப்படி சேதநரக்ஷணத்தையே முக்யமாகத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனோடுகூட ஒவ்வொரு திவ்யதேசத்திற்கும் எழுந்தருளினபடி. இதையன்றோ ஆசார்யபதம் நிர்வஹிக்குமவர்களிடத்தில் எதிர்பார்ப்பது ஸர்வேச்வரன். லோகத்தில் சிதறியுள்ள ரத்நங்களை பொறுக்கியெடுப்பதற்காகவன்றோ ஆசார்யவேஷம் பூணுகிறான் ஸ்ரிய:பதி. இப்படி திவ்யதேசங்கள்தோறும் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளுங்காலத்தில் ப்ராஸங்கிகமாக ஏற்படும் பல கைங்கர்யங்களை அங்கங்கு செய்தருளியுள்ளார் ஸ்ரீ ஸ்வாமி. இவர் செய்துள்ள கைங்கர்யங்கள் பலவுள. இவர் ஆஸ்தாநத்தில் 60-சாதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்தபடி. திருநாராயணபுரத்தில் திருக்கல்யாணீதீரத்தில் ப்ருந்தாவனம்.

ஆதிமறையுருவான வாதிப்புள்வெற்பதனில்
சோதியெனவுலகெல்லாம் சுகப்பெறவே
வந்துதித்த
ஆதிகுருநரசிங்கனருளாலேயோகியான
ஆதிவண்சீர்ச்சடகோப னடியிணையென்
முடிமணியே.

லோகமெல்லாம் வாழ வந்துதோன்றிய இம்மஹானின் திருவடிகள்தான் ஸுத்ருடவ்ரத வாதிநித்ரம் யதீந்த்ரவரணம் ஶரணம் என்கிறபடி இக்குமங்கும் தஞ்சமாகக்கடவது.

(113-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறபடியாலும் ஸ்ரீராமசந்த்ரன் இலங்கையிலிருந்து பிராட்டியுடன் அயோத்திக்குத் திரும்பிவருகிறவழியில் பிராட்டியைப்பார்த்து 'ஏதத்து த்ருஶ்யதே தீர்த்தம் ஸாகரஸ்ய மஹாத்மந: | ஸேதுபந்த இதி க்யாதம் த்ரைலோக்யேந ச பூஜிதம் || ஏதத் பவித்ரம் பரமம் மஹாபாதகநாஶநம்' என்று ஸேதுஸம்பந்தம் பெற்ற கிழக்குமேற்கு ஸமுத்ரரூப தீர்த்தவிசேஷங்களுடைய பாவநத்வத்தையருளிச்செய்திருப்பதாலும் கருணை ஸ்ரீராமன்மூலமாக ஸேதுபந்தனஞ்செய்ததானது எல்லாவற்றைக்காட்டிலும் மிகவுமுத்க்ருஷ்டமான வ்யாபாரமென்பதற்குத் தட்டில்லை. மேலும் நம் தூப்புல் வள்ளல் தசாவதார ஸ்தோத்ரத்திலும் எல்லாவவதாரங்களுக்குமொரு விசேஷணம் ஸமர்ப்பித்துக்கொண்டுவருகையில் சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் வரும்போது 'கருணாகாகுத்ஸ்த' என்றல்லவோ அவனை விசேஷிப்பித்திருந்தபடி. ஆகையினால் மஹாகவிகளும் ஆழ்வாராசார்யர்களும் ஸ்ரீ ராமசந்த்ரனுடைய கருணையிலேயே ஈடுபட்டிருக்கிறப்படியால் நாமும் ஸ்ரீராமனை நினைக்கும்போதெல்லாம் கருணையோடு கூடினவனாகவே அநுஸந்திப்பது நலம்.

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புகள்

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌵𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲 𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய மஹாராதன கைங்கர்யம் சென்ற மாசி மீ 28-வ (11-3-53) புதன்கிழமை திருவெவ்வுளூரில் லோகோத்தரமான ரீதியில் சிறப்பாக நடந்தேறியது. பலவிடங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்திருந்தனர். பலவிதமான அஸௌகர்யங்களிருந்தும் அவற்றைப் பொருட்படுத்தாமல் திரள் திரளாக குழுமியிருந்த ஸ்ரீவைஷ்ணவகோஷ்டி, திருநாட்டிற்கெழுந்தருளிய ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் சிஷ்யகோடிகளுக்கும் அபிமானிகளுக்கும் ஏற்பட்டிருந்த ஹார்த்தமான பக்திக்கு ஓர் நிதர்சனமாக விளங்கியது. அந்த ஸ்ரீ அழகியசிங்கரால் 43-வது பட்டத்திற்கு நியமிக்கப்பட்ட ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய பட்டாபிஷேகத்தை மாசி-மீ 30-வ (13-3-53) வெள்ளிக்கிழமை வைத்துக்கொள்ளவேண்டுமென்று பல சிஷ்யர்கள் விரும்பியபடியே அன்றைய தினம் காலையில் பட்டாபிஷேகம் சுபமுஹூர்த்தத்தில் பட்டாபிஷேக மஹோத்ஸவம் அத்யத்புதமான முறையில் நடைபெற்றது. அம்மஹோத்ஸவத்தைக் கண்டு களிக்க ஆயிரக்கணக்கில் ஸ்ரீவைஷ்ணவச்ரேஷ்டர்களும் மற்ற ஜனங்களும் ஓர் பெருந்திரளாகக் கூடிவிட்டனர். புண்யதீர்த்தம் நிறைந்த ஸ்வர்ண ரஜத கும்பங்களை அதி காலையில் யானையின் மீதேற்றிக் கொண்டு ஸ்வஸ்திவாசனத்துடனும் மங்கள வாத்யகோஷத்துடனும் வைதிகோத்தமர்கள் திருவீதிவலம்வந்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதி முன்பு அந்த கும்பங்களை அலங்காரமாக வைத்தனர். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு விசேஷ ஆராதனம் நடந்தபின் அவ்வெம்பெருமானின் நியமனத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யாஸ்தாந பீடத்தில் அமர்ந்தருளினர். அனேக ப்ராஹ்மணோத்தமர்கள் வேதமந்த்ரங்களால் பூர்ணகும்பங்களிலுள்ள தீர்த்தத்தை அபிமந்த்ரணம் செய்த பின்பு ஸகல மங்களவாத்யகோஷங்களுடன் ஸ்ரீ அழகியசிங்கருக்கு பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து வெகு அழகான ரீதியில் ஆஸ்தான நிர்வாஹம் செய்து கொண்டு ஸம்ப்ரதாயத்தை நன்றாகத் தழைத்தோங்கச் செய்யவேண்டுமென்று எல்லோரும் மனப்பூர்வமாய் ஆசீர்வதித்தனர். 42-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் தமக்குப்பின் ஆஸ்தான நிர்வாஹம் செவ்வனே நடந்து வருவதற்கு இப்படிப்பட்ட ஓர் மஹானை நியமித்தருளியது ஓர் மஹோபகாரமென்று அந்த ஸ்ரீ அழகியசிங்கரை அனைவரும் புகழ்ந்தனர்

பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் அங்கு கூடியிருந்த அடியார்களுக்கு நன்றாக ஸேவை ஸாதிப்பதற்காக மடத்திற்கு வெளியில் எழுந்தருளி வீதியிலுள்ள பதினாறுகால் மண்டபத்தில் சில நிமிஷங்கள் எழுந்தருளியிருந்தார். அநந்தரம் ஸ்ரீ வீரராகவன் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸேவை ஸாதிக்கத் திருவுள்ளங்கொண்டு கோயில் பரிஜனங்கள் மூலமாக விசேஷ மர்யாதைகளை அனுப்பியருள ஸ்ரீ அழகியசிங்கரும் அவற்றை சிரஸாவஹித்து ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீ வீரராகவனையும் கனகவல்லித் தாயாரையும் மங்களாசாஸநம் செய்தருளி ஆழ்வார் ஆசார்யர்களையும் ஸேவித்துக்கொண்டு

ஸகல மர்யாதைகளையும் பெற்றுக்கொண்டு ஸந்துஷ்டராய் மடமேற எழுந்தருளினார். அன்று விசேஷ ததியாராதனம் நடந்தது. இரவு ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப்பல்லக்கில் ஸகல பிருதுகளுடனும் மரியாதைகளுடனும் திருவீதிகளில் ஊர்வலமாக எழுந்தருளினார். பிறகு கண்ணனுக்கு டோலோத்ஸவம் நடைபெற்றது. அப்போது பல வித்வான்களும் கவிகளும் ஸ்ரீ அழகியசிங்கரைப்பற்றித் தாங்கள் இயற்றிய க்ருதிகளை வாசித்து அவற்றின் பொருளைச் சுருக்கமாய் விளக்கினர். பல ஊர்களிலிருந்து வந்த மரியாதைகள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன.

மறுநாள் ஸ்ரீ பெரிய அழகியசிங்கரின் த்வாதசாராதன கைங்கர்யம் சிறப்பாக நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை (15–3–53) நடந்த இயல் கோஷ்டி அத்யத்புதமாக இருந்தது. அந்த கோஷ்டியை ஸேவிக்கப்பெற்றவர்கள் 'மெய்யடியார்கள் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண்பயனாவதே' என்று குலசேகரப்பெருமாள் அருளியபடி தாங்கள் கண் படைத்த பயனைப் பெற்றனர்.

வந்திருந்தவர்களுக்கெல்லாம் அவரவர்களுக்குத் தகுந்த ரீதியில் அவரவர் பூர்ணமாய் ஸந்தோஷிக்கும்படி ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்மானமும் பலமந்த்ராக்ஷதையும் அநுக்ரஹித்தருளினார்.

இம் மஹோத்ஸவங்களை ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்யபரர்களும் மற்ற அபிமானிகளும் மிக்க உத்ஸாஹத்துடன் நன்றாக நடத்திவைத்தது மிகவும் போற்றத்தக்கது.

அநேக மஹான்களுடைய மனோரதப்படியும் எல்லோருடைய பூர்ணமான ஆதரவுடனும் அன்புடனும் ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்திற்கு எழுந்தருளியிருக்கும் இந்த ஸ்ரீ அழகியசிங்கர் அரோகதிடகாத்ரராய் பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணம் செய்து அனைவரையும் உஜ்ஜீவிக்கச் செய்துவரவேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அருள்புரியப் பிரார்த்திக்கிறோம்.

* * * * * * *

எம்பெருமான் தனித்தனியே விபவாவதாரமோ அர்ச்சாவதாரமோ ஆசார்ய திருமேனி அநுப்ரவேசாவதாரமோ எடுத்துக்கொண்டு ஸாதுபரித்ராணம் செய்துவந்ததில் ஒரோர் குறையிருந்துவந்தது. அக்குறை யாதொன்றுமில்லாமல் எல்லாவிடத்திலுமுள்ள சேதநர்களும் எக்காலமும் உஜ்ஜீவிக்கவேண்டுமென்ற பரமக்ருபையுடன் சிங்கவேள்குன்றத்தெம்பிரானாகிய ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் மூலமாக அவிச்சின்னமாக இந்த அஹோபிலமட திவ்யாஸ்தாநபரம்பரையை ஏற்படுத்தி அந்த திவ்யாஸ்தாநபரம்பரையில் மூர்த்தாபிஷிக்தர்களான ஆசார்யச்ரேஷ்டர்கள் ரூபமாகத் தான் அநுப்ரவேசாவதாரம்செய்தவதரித்தும் ஊர்ஊராக

ஸஞ்சாரம்

தன்னை அந்த ஆசார்யர்கள் ஸஞ்சாரமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் ஆங்காங்குள்ள சேதநர்களை உஜ்ஜீவிக்கப்பண்ணும்படி கடந்த 500 வருஷங்களாகச் செய்துகொண்டு வந்திருக்கிறான். சென்ற ஆறேழு வருஷங்களாகத் திருவள்ளூரில் ஸ்திரமாகக் கோயில் கொண்டெழுந்தருளியிருந்தான். இப்போது மறுபடி தனது ஸஞ்சாரமஹோத்ஸவத்தைத் தொடர்ந்து நடத்தத் திருவுள்ளம்பற்றியிருக்கிறான். சென்ற பங்குனிமீ 9உ ஞாயிற்றுக்கிழமை காலையில் ஸஞ்சாரம் ஆரம்பமாகியது. ஸகலபரிஜநபரிவாரங்களுடன் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் திருவள்ளூருக்கு ஸமீபத்திலுள்ள கிழானூர் என்ற கிராமத்திற்கு எழுந்தருளினார். அங்கிருந்து ஊர் ஊராக இப்போது ஸஞ்சாரம் நடந்துகொண்டு வருகிறது. சிஷ்யகோடிகளின் ஸௌகர்யத்தை உத்தேசித்து, ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரத்தைப்பற்றிய விபரங்களைக் கூடிய மட்டில் முன்னதாக அறிவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துவருவதாக அறிகிறோம். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸகலபரிவாரங்களுடன் ஆராதிக்கும்படியான புண்ணியம் செய்தவர்களின் க்ருஹங்களில் பெருமாள் எழுந்தருளி அவர்களையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் அவரவர்களை வ்யாஜீகரித்து அவ்வூரிலுள்ளோர் எல்லாரையும் தன்னுடைய இன்னருளுக்கு

இலக்காக்கிக் கொள்ளப்போகிறார். ஆத்மோஜ்ஜீவநகார்யங்களைச் செய்துகொள்ளவேண்டிய சிஷ்யர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் ஆச்ரயித்துக்ருதார்த்தர்களாகப்போகிறார்கள்.

* * * *

ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரமஹோத்ஸவம் அதிக ச்ரமமில்லாமல் நடைபெறவேண்டியது மிகவும் ஆவச்யகம். காலதேசவர்த்தமானங்களில் ஏற்பட்ட மாறுதலால் பல அம்சங்களில் முன்னாளிலிருந்ததைவிட இப்போது அதிகமான செலவும் சிரமமும் நேரிடக்கூடியதாயிருக்கிறது. ஸ்ரீ ஸன்னிதியின் நீண்டநாளைய பெருமைக்கு ஒத்ததாயும் சிஷ்யர்களின் பூர்ண ஸம்மதத்தைப் பெற்றதாயுமுள்ள ரீதியில் ஸஞ்சாரஸாதனங்களை யமைத்துக் கொடுக்க வேண்டியது ஸன்னிதியில் அபிமானமுள்ளவர்களின் கடமையாகும். ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளமுகக்கும் வகையில் இந்தப் பொருப்பை அவர்கள் நன்றாக நிறைவேற்றுவார்களென்றே நம்புகிறோம்.

ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரமேயில்லாமல் ஒரே இடத்தில் எழுந்தருளியிருந்தால் நெடுந்தூ த்திலுள்ள சிஷ்யர்கள் பலருக்கு அர்த்தஸௌசர்யமுமவகாசமும் இல்லாதகாரணத்தால் ஸந்நிதிக்கு வந்து ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளிலாச்ரயித்து ஆத்மோஜ்ஜீவநகார்யங்களைச் செய்துகொள்ள முடியாமல்போகும். இக்குறையைத்தீர்ப்பதை ஓர்முக்கிய நோக்கமாகக் கொண்டே ஸஞ்சாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸஞ்சாரம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான பிரதேசங்களில் பரவி நடைபெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிக சிஷ்யவர்க்கங்கள் ஆசார்யனை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்க அதிகவஸதியேற்படுமென்பது தெளிவு. மேலும், ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணி ஆராதிக்கவேண்டுமென்ற பக்தியும் ச்ரத்தையும் அதிகாரமுமுள்ளவர்கள் எவ்வளவு பேர்களோ அவ்வளவுபேர்களும் ஆராதிக்கும்படி நியமங்களும் ஸந்தர்ப்பங்களும் இருந்தால் மிக்க நன்மையுண்டு. ஆங்காங்கு உள்ளவர்கள் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவிப்பதற்கு அந்த இடத்தை அணுகும்போதே அவர்கள் மனத்தில் ஓர் நல்லுணர்ச்சியும் பயபக்தியும் உண்டாகும்படியான ஓர் சூழ்நிலை இருந்துவரவேண்டியது ஆவச்யகம். மேலேகூறப்பட்ட அம்சங்களெல்லாம் நன்றாக அமையும்படி செய்யும் பொறுப்பு பெரும்பாலும் ஸ்ரீ ஸந்நிதியிலுள்ள கைங்கர்யபரர்கள் அனைவரையும் சார்ந்தது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் உயர்ந்த புருஷார்த்தமாகக் கருதப்பட்டுவரும் பகவத் கைங்கர்யம், ஆசார்ய கைங்கர்யம் பாகவத கைங்கர்யம் இவைகளைச் செய்யத் தமக்கு ஓர் அரிய ஸந்தர்ப்பம் வாய்த்திருக்கிறதென்றும், ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து கொடுக்கப்படும் த்ரவ்யம் முதலியவற்றைப் பிரதிப்ரயோஜனமாக எதிர்பார்த்து அந்தக் கைங்கர்யங்கள் செய்யப்படவில்லையென்றும், அவைகள் தமக்கு ஸ்வரூபப்ராப்தங்களான ஸ்வயம்ப்ரயோஜனமான கைங்கர்யங்கள் என்றும் திடமான எண்ணம் அவர்கள் மனத்தில் எப்போதுமிருக்கவேண்டும். அப்படியிருந்தால் கைங்கர்யம் செய்யும்போது அதில் ஒரு அலுப்போ வெறுப்போ தோன்றாது. மற்ற கைங்கர்யபரர்கள்மீது அஸூயையே உண்டாகாது. அவர்கள்மீது தோஷம் சொல்லவும் தோன்றாது. மிகுந்த பரிவுடனும் அந்தரங்கமான அன்புடனும் கைங்கர்யம் செய்யவேண்டுமென்ற ஆவல் ஏற்படும். அப்படிக்கைங்கர்யம்செய்தால் அதனால் பெருமாள் திருவுள்ளமும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளமும் மற்ற பாகவதர்களின் திருவுள்ளமும் பெரிதுமுகக்கும். கைங்கர்யபரர்களுக்கும் தந்தம் கைங்கர்யங்களைச் செய்வதில் ஓர் அலாதியான இன்பமும் ஸந்துஷ்டியும் ஏற்படும். உண்மையான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவர்கள் ஓர் நிதர்சனமாக விளங்குவார்கள். முதல்முதலாக அவர்களைப் பார்க்கும்போதே பார்ப்பவர்கள் மனத்தில் ஸத்வகுணம் மேலிட்டு பக்தி ச்ரத்தைகள் தாமாக உண்டாகும். அப்படிப்பட்ட ஸந்நிவேசத்தில் பெருமாளையும் அழகியசிங்கரையும் ஸேவித்து நிற்பவர்களுக்கு 'நாம் இங்கு வரும் முன்பு இருந்ததைவிட இப்போது ஆத்மவிஷயமாய் அநேக உண்மைகளைத் தெரிந்து கொண்டு நன்மையை அடைந்தவர்களாயிருக்கிறோம்' என்ற எண்ணம் ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமையேற்பட்டால் ஸஞ்சாரத்

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேகமானவுடன் எடுத்த படம்



ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரம் எழுந்தருளுதல்

தில் எல்லோருக்கும் நல்ல பலனுண்டு. இந்த உண்மையை இப்போது ஸந்நிதியிலுள்ள கைங்காயபரர்கள் நன்குணர்ந்து நடந்துவருகிறார்களென்பதை நாம் அறிவோம். இருப்பினும், அவர்கள் இப்படி இருக்கவேண்டுமென்பதை வெளியிலுள்ளோரும் தெரிந்துகொண்டு அதை எப்போதும் அவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு **'स्मारये त्वां न शिक्षये'** என்ற கணக்கில் ஸவிநயம் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம்.

* * *

ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணி ஆராதிக்க விரும்புமவர்களுக்கும் ஓர் விண்ணப்பம் செய்துகொள்ளவிரும்புகிறோம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸகல பரிவாரத்துடன் எழுந்தருளப்பண்ணி ஆராதிப்பதென்பது ஓர் மஹத்தான புண்யபலமாகும். அந்த பாக்யம் கிடைப்பது மிகவும் அபூர்வம். அந்த பாக்யம் தமக்குக் கிடைத்ததைப் பற்றி அவர்கள் அகமகிழ்ந்து பெருமாளிடமும் அழகியசிங்கரிடமும் ஹார்த்தமான பக்தியுடனும் ச்ரத்தையுடனும் ஆராதிக்கவேண்டும். கைங்கர்யபரர்கள் கேவல அர்த்தத்தை உத்தேசித்து கைங்கர்யம் செய்யவில்லையென்றும் அது தங்கள் ஸ்வரூபமென்ற எண்ணத்துடன் கைங்கர்யம் செய்துவருகிறார்களென்றும் உணர்ந்து அவர்களிடம் பஹுமானம் வைக்கவேண்டும். ஆசார்யன் உபதேசம் செய்யும்பொழுது தம்மிடமுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்காட்டினால் தம்மை சீர்திருத்தி நல்வழிப்படுத்தவேண்டுமென்ற அவ்யாஜக்ருபையாலேயே தமக்கு உபதேசிக்கிறாரென்றும் தம்மீது தோஷம் சொல்லும் நோக்கத்துடன் ஆசார்யன் அப்படியருளிச்செய்யவில்லையென்ற எண்ணத்துடன் ஆசார்யன் காட்டிய வழியைப் பின்பற்றி நடந்து நன்மையையும் மேன்மையையும் அடைந்து க்ருதார்த்தர்களாக வேண்டும். அப்படிப்பட்ட ஸாத்விக ஸ்வபாவம் அவர்களுக்குண்டாகி அவர்கள் தன்னை ஆராதித்து க்ருதார்த்தர்களாகும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸங்கல்பிப்பானென்றே நம்புகிறோம்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்

இப்போது 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர் 'வாரம் ஜ்யோதிராவஸம்வத்ஸ ஸநாவேணா ஹிநிஷ்வத்தெ' என்கிற ச்ருத்யர்த்தப்படி திருநாட்டையலங்கரித்தார் என்பதும், பிறகு 43-வது பட்டமாக எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் 42-வது பட்டமாயிருந்த ஸ்ரீ அழகியசிங்கருடைய மஹாராதநாதிகளை ரொம்பவும் நன்றாய் நடத்தி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹாராதநசிஷ்யபரிபாலநாதிகளை நன்றாய நடத்திவருகிறாரென்பதும் தெரிந்தவிஷயமாயிருக்கலாம். 42-வது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கர் 2 வருஷத்திற்குமுன்புதன் திருமேனியில் தளர்ச்சி கண்டவுடனே இந்த லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் அவனுடைய விபூதியையும் 'வாதூஸ்தஜ்ஞாநக்ருஷ்ணா விஷ்ணம்ஸ ஸ்த்ரஜெஜஸ। நாஹ்யாய ஸ்வயம் யாதி ஜஹ்ஜ ஸ்வீஜக்ருஜஸ॥' (விஷ்ணம்—சரீரம்) என்கிறபடி யாரிடத்தில் ஒப்பிவைக்கிறதென்பது தெரியவில்லையே என்று ராத்ரியில் தூக்கமில்லாமல் விசாரம் வரும்போது ஸ்வப்நம்போல் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் 'ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் என்பவர் தேவனூர்விளாகத்தில் ஸாதுவாயும், வித்வானாயும், ஶாந்திதாந்த்யாதிகுணபரிபூர்ணராயும், உதாரராயும், தநிகராயுமிருந்த திருவேங்கடாசார்யரென்கிற ஸ்வாமியின் குமாரர். அவரும் அவ்வளவு குணமுமுள்ளவராய் எழுந்தருளியிருக்கிறார். அவரிடத்தில் என்னை ஒப்புவித்துவிடும்' என்று சொன்னதுபோல் திரு

வுள்ளத்தில் தோன்றிற்று. அப்போது ‘நீயலையே சிறுபூவாய் நெடுமாலார்க்கென் தூதாய் நோயலது நுவலென்ன நுவலாதேயிருந்தொழிந்தாய் சாயலொடுமணிமாமை தளர்ந்தேன் நானினியுனது வாயலகில் இன்னடிசல் வைப்பாரை நாடாயே’ என்று திருவாய்மொழிபோலில்லாமல் நல்லவேளையாய் இப்படி நியமித்தது ஸந்தோஷமென்றெண்ணி அந்த ஸ்வாமியை வரவழைத்து அவருக்கு ஸந்யாஸாச்ரமத்தைக் கொடுத்து இருவருமாக கொஞ்சகாலம் அதாவது 2வருஷகாலம் பதரிகாச்ரமத்தில் நரநாராயணர்கள்போல் குருசிஷ்யபாவத்தை லோகத்தாருக்குக் காண்பித்துக்கொண்டு ‘நரநாரணாயுலகத்தறநூல்சிங்காமைவிரித்தவன்’ என்கிறபடியே மந்த்ரார்த்த ஸ்ரீபாஷ்யாதிகளை ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கையில் 42-வது பட்டத்து ஸ்ரீபெரிய அழகியசிங்கரை ‘வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே’ என்கிறபடியே நித்யஸூரிகள் வந்து பரஞ்ஜ்யோதிஸ்ஸின் ஸமீபத்தில் ‘வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்து’ என்கிறபடியே எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோனார்கள்.

பிறகு 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதிபிருதாலங்க்ருத தர்க்க வேதாந்த ஸம்ப்ரதாயார்த்தங்களுக்கு நிதியாயுமிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் ஆஸ்தானநிர்வஹண, பகவதாராதன சிஷ்யபரிபாலநாதிகளான தம்முடைய கார்யங்களை நன்றாய் நடத்திக்கொண்டு திருவள்ளூரிலிருந்து ஸஞ்சாரமாக எழுந்தருளியாயிருக்கிறார். இது சிஷ்யர்களுடைய பாக்யம்தான். இப்போது சிஷ்யர்களாகிய நாமெல்லோரும் செய்யவேண்டிய கார்யம் ‘வேதநூல் பிராயம் நூறு’ என்கிற திருமாலைப்படி பிறவியில்லாமலிருக்கும் பொருட்டும் பூமியிலிருக்கிறவரையில் க்ஷேமத்தோடிருப்பதற்கும் அடிக்கடி ஸ்ரீ அழகியசிங்கரைத்தெண்டனிட்டு ‘ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்’ என்று கேட்டு க்ரந்தசதுஷ்டயங்களையும் காலக்ஷேபம் பண்ணி தெரிந்துகொண்டு, (1) [illegible]காலே, (2) ஸ்வாத்யாயகாலே, (3) தேஹாவஸானகாலே, (4) வ்யவஹாரகாலே’ என்று வித்யாபூர்த்திக்குச் சொல்லியிருக்கிற வ்யாகரணமஹாபாஷ்யத்தின்படி ஆசார்யனிடத்தில் 1-வது காலத்தில் வித்யாக்ரஹணம் பண்ணிவந்து பிறகு 3-வதுகாலத்தில் சொல்லிய அநுஷ்டானம் செய்துவந்தால் ‘ந ஹி கல்யாணக்ருத் கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி’ என்கிறகீதாவாக்யப்படி ஶாஸ்த்ரார்த்த வைசத்யமும், ‘[illegible] ஜாயந்தே ஜனவாஸேஷு விபஞ்சித் ஸ்வயம் ந:’ என்கிறபடியே ஸம்பத்தும் தானே வரும். ‘[illegible] ராஜகம் | [illegible] யஜ்ஞஸ்ய தக்ஷிணா: ||’ என்கிற மஹாபாரதவசனப்படி இல்லாமல் ஸம்பந்நர்களாகவே யிருக்கலாம். தவிர காலக்ஷேபம் பண்ணினதுகளிலும் பண்ணாததுகளிலும் ஶாஸ்த்ரார்த்தத் தெளிவும் ‘யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ | தஸ்யைதே கதிதா ஹ்யர்த்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந: ||’ என்கிறபடி ஆசார்யபக்தி பூர்ணமாக இருந்தால் புத்திப்ரதிபையினால் உபதேசம்பெறாத அர்த்தங்களும் ப்ரகாசிக்கும். ‘ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:’ என்கிறபடியே ஸமாச்ரயணமந்த்ர மந்த்ரார்த்தாதிகளைப் பெற்றுக்கொண்டு தன்னுடைய சக்திக்கநுகுணமான தக்ஷிணையை ஆசார்யன் திருவடிகளில் ஸமர்ப்பித்து விடைபெற்றுக்கொண்டு தன் க்ருஹத்திற்குப் போகவேணும். ஆசார்யசிஷ்யர்களுக்கு பரஸ்பரம் எந்த காரணத்தைக்கொண்டும் மனஸ்தாபம் ஏற்படக்கூடாது. ‘நைவம் வித்வாநாசார்யாய [illegible] | [illegible] யோ த்ருஹ்யதி | [illegible]’ என்கிற ச்ருதிப்படி மோக்ஷமேயில்லாமல் போய்விடும். ஸ்வர்க்காத் என்கிற பதத்திற்கு மோக்ஷமென்று அர்த்தமாகையால் ‘[illegible]’ என்றும் வேறு இடத்தில் ச்ருதியானது குருவிடத்தில் அபசாரப்பட்டால் அது பல கஷ்டங்

(தொடர்ச்சி 122-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் யாத்ராமஹோத்ஸவம்

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் நந்தன வருஷம் பங்குனி மாதம் 9-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6_30-மணிக்கு ஸஞ்சாரம் எழுந்தருளுவதற்கு நன்னாள் என்று ஸ்ரீ அழகியசிங்கர் மூலமாகத் திருவுள்ளம்கொண்டான். இவ்விஷயம் சென்னைமாநகரிலும், சுற்றிலுமுள்ள க்ராமங்களிலும் வெகு வேகமாகப் பரவவே ஆங்காங்குள்ள ஆஸ்திகர்கள் முதல்நாள் ஸாயங்காலம் திருவள்ளூருக்கு திரளாக வந்து சேர்ந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை பின்மாலை 4–30 மணியிலிருந்தே உள்ளூர் வெளியூர் ஸ்வாமிகள் த்வாதசோர்த்வபுண்ட்ரத்துடன் ஸேவைஸாதித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் ஸஞ்சாரம் புறப்படுவதற்குமுன்பு நித்ய கர்மாநுஷ்டானங்களை பூர்த்திசெய்துகொண்டு ஸ்ரீஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு விச்வரூபாராதனம் செய்தருளினர். பிறகு யாத்ரைக்கு ஸங்கல்பித்துக்கொண்டு அங்கு குழாங்களாய்க் கூடியிருக்கும் வைணவப் பெரியோர்களுக்கு யாத்ராதானம் செய்தாயிற்று. ஸ்ரீ ந்ருஸிம்ஹன் யாத்ரைக்கு ஸித்தமாவதற்குள் ஸ்ரீ அழகியசிங்கர்களின் குலதனமான ஸ்ரீ ராகவனின் தேவாலயத்தினுட்சென்று த்வஜஸ்தம்பம் ஸமீபத்தில் தண்டம் ஸமர்ப்பித்து ஸ்ரீவீரராகவனின் நியமனம்பெற்று, ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் ஸந்நிதியுள் எழுந்தருளி அவ்விடத்திய நியமனமும்பெற்று ஸ்ரீ ஸந்நிதி வாசலுக்கு எழுந்தருளியாயிற்று.

ஏழுவருஷகாலமாக திருவள்ளூரில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஏழே தினங்களில் ஸஞ்சாரம்செய்யத் திருவுள்ளம் பற்றினான். கஜேந்த்ராழ்வானை ரக்ஷிக்கப் புறப்பட்ட பகவானின் ‘ஸ த்வரித கதி:...... ஹஸ்திராஜாய நம:’ ‘ஆக்ருஷ்ய நிஜராஜஸைந்ய திஜவாஸ’ என்று அநுஸந்தானம்பண்ணிவருகிற த்வரையை இப்பொழுதே இக்கலியில் ஸேவிக்கநேர்ந்தது. ஸுதீக்ஷ்ணரினிடத்தில் நியமனம் பெற்று வெளிவந்து தண்டகாவனத்தில் ஸஞ்சரிக்கப் புறப்பட்ட ஸ்ரீராமபிரானை ஸீதாப்பிராட்டியானவள்— ‘நஹி மே ரோசதே வீர! கமநம் தண்டகாந் ப்ரதி’ என்றாள். அதற்குச் சக்ரவர்த்தித் திருமகனான ராமன் ‘...... ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: । ததவச்யம் மயா கார்யம் ருஷீணாம் பரிபாலநம் । அநுக்தேநாபி வைதேஹி!’ என்று ராக்ஷஸர்களை ஹிம்ஸிக்கப்புகும்போதேயருளிச் செய்தான். *அங்காங்கு சென்று சேதநர்களை ரக்ஷிப்பதற்கு ஸஞ்சாரம் செய்வதற்கென்றே பாதுகையை சாத்திக்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ‘அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு’ என்று அடியார்களான அடியோங்கள் தினப்படி பல்லாண்டு பாடினாலும், தன் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டும், இத்தனை வருஷங்கள் மறந்திருந்த ஸிம்ஹத்வத்தை எண்ணியும் காடு, மலை, வனவனாந்தரங்களில் உள்ளவர்களான ஆச்ரிதர்களை ரக்ஷிக்க மிகுந்த த்வரையுடன் புறப்பட்டுவிட்டான் சரண்யனான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்.

---

*இதர அர்ச்சைகளைப்போல் ஒரே இடத்தில் எழுந்தருளியிருந்தால் தன்னையாச்ரயித்து ஜனங்கள் உஜ்ஜீவிக்கமாட்டார்கள் என்றெண்ணி ஸஞ்சாரம்பண்ணத் திருவுள்ளம்கொண்டான். கிணற்றில் சொம்பு விழுந்துவிட்டால் அதை ‘பாதாள கொலுஸு’ என்னும் ஒரு ஸாதனத்தைக் கொண்டு எடுக்க ஒருவன் ப்ரயத்நம் செய்கிறான். அதாலும் எடுக்கமுடியாவிட்டால் தானே கிணற்றில் இறங்கி முழுகி எடுக்க எப்படி முயற்சிக்கிறானோ அதுபோல் இருள்தருமா ஞாலத்தில் முழுகிக்கிடக்கும் ஜனங்களை ரக்ஷிப்பதற்காக ஆங்காங்கு செல்லமுற்பட்டார் என்று ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் பணிக்கும்படி.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தங்கப்பல்லக்கில் முன்பும், ஸ்ரீ கண்ணன் பல்லக்கு பின்பும் எழுந்தருள ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வஸ்திவாசநத்தைச் சொல்லிக்கொண்டு அநுயாத்ரையாய் பத்தெட்டடி எழுந்தருளியாயிற்று. பிறகு சிஷ்யர்களின் ப்ரார்த்தனையின்பேரில் ஸ்ரீ அழகியசிங்கர் பல்லக்கில் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ சடகோபமஹாதேசிகன் ப்ருந்தாவனத்தையடைந்ததும், ஸ்ரீ அழகியசிங்கர் கீழிறங்கி உட்சென்று தண்டன் ஸமர்ப்பித்து நியமனம்பெற்று ஹ்ருத்தாபநாசநியில் இறங்கி புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் சிறியதோர் குளத்தை கடாக்ஷித்துவிட்டு, தென்குளக் கரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர்களைக் கைகூப்பிவணங்கி நியமனம்பெற்று மறுபடியும் பல்லக்கில் எழுந்தருளி 6 மைல் தூரத்திலுள்ள கீழானூர் க்ராமத்திற்கு அவ்வூர் ஸ்வாமிகளின் ப்ரார்த்தனையின்பேரில் எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து திருக்கள்ளத்திற்கு மறுதினம் எழுந்தருளி 10 தினங்கள் தங்கியிருந்து பிறகு காளப்பாக்கம், பாக்கம், திருக்கள்ளம் காவனூர் முதலிய க்ராமங்களுக்கு எழுந்தருளியாயிற்று. இப்பொழுது பருத்திப்பட்டு வில்லிவாக்கம் வழியாக சென்னைக்கு எழுந்தருளப்போவதாகக் கேள்விப்படுகின்றோம். [illegible]
[illegible]

நடாதூர், கிருஷ்ணமாசார்யர்,
திருவுள்ளூர்.

வைரமுடி ஸேவை,
திருநாராயணபுரம்.

திருநாராயண புரத்தில் மாமூலாக நடந்து வரும் வைரமுடி ப்ரஹ்மோத்ஸவம் நந்தன வருஷ பங்குனி மாதம் 7ம் தேதி அங்குரார்ப்பணமாகி 12ந்தேதி (25-3-53) புதன்கிழமை வைரமுடிஸேவை. 26-3-53 வியாழக்கிழமை ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மங்களாசாஸனத்திற்காக ப்ருந்தாவன மண்டபத்திற்கு ஸ்ரீசெல்வப்பிள்ளையும், உபய நாச்சிமார்களும், ஸ்ரீபாஷ்யகாரரும் எழுந்தருளினார்கள். ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுக்கு அருளப்பாடு, மரியாதை நடந்தவுடன் பிறகு கோஷ்டிக்கு தீர்த்த ப்ரஸாதவிநியோகம் நடந்தது. மறுநாள் (27-3-53) வெள்ளிக்கிழமை நம் ஸ்ரீமடத்திற்குப் பெருமாள் எழுந்தருளி திருவாராதனம் கண்டருளி 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளப்பாடு மரியாதை இவைகள் நடந்த பிறகு கோஷ்டிக்குத் தீர்த்தப்ரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டது. பிறகு இவ்விடத்திலேயே கஜேந்த்ரனுடைய மோக்ஷாநுக்ரஹத்துக்காக ஸ்ரீசெல்வப்பிள்ளைக்கு கஜேந்த்ரவரதனுடைய சாத்துப்படி ஆகியது. இந்த உபயமானது ஸ்ரீ அழகியசிங்கரின் பரிபூர்ணமான அநுக்ரஹத்தினால் நடந்தேறியது.

கஸ்தூரி ஸ்ரீநிவாஸாசாரியர், ஆராதகர்,
ஸ்ரீ அஹோபிலமடம், மேலக்கோட்டை.

(120-ம் பக்கத்தொடர்ச்சி)

களை உண்டுபண்ணிவிடுமென்றும் சொல்லியிருக்கிறதைத் தெரிந்துகொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனிடத்திலும் ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலும் பரிபூர்ணபக்தியுடனிருந்துகொண்டு நித்யஸ்ரீர்நித்யமங்களமுள்ளவர்களாகவே யிருக்கவேணும். இந்தப்படி ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹிக்கவும் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவீரராகவ [illegible] |
[illegible]
[illegible] ||

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேக ஸ்ரீமுகம், தேரழுந்தூர்.

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் (ஸ்ரீ தேவனார்விளாகம்) ஸ்ரீமதழகியசிங்கரான ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பட்டாபிஷேகம் சென்ற மாசி மீ 30-ம்தேதி நடைபெற்றதைமுன்னிட்டு இந்த திவ்யதேச சிஷ்யகோடிகளுக்கு அனுப்பப்பட்ட ஸ்ரீமுகத்தை வரவேற்று தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் சிஷ்யர்களுடைய பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் ஸ்ரீமுகத்தையும் ப்ரக்ருதம் ஸ்வாமியினுடைய திருவுருவப் படத்தையும் ஸ்ரீ ஆமருவியப்பன்ஸந்நிதியிலிருந்து வந்திருந்த பல்லக்கில் நன்கு அலங்கரித்து ஸ்ரீ எம்பெருமானுடைய திருப்பரிவட்ட மாலை மர்யாதைகளையும் அருளிப்பாடிட்டு சேர்க்கப்பட்டபின், ஸ்வஸ்திவாசநம், ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமபாராயணாதிகளுடன் சென்ற 5-4-53 ஞாயிறு மாலை 6-30 மணிக்குமேல் வீதிப்ரமணம் (ஊர்வலம்) நடைபெற்றது. ஷை ஊர்வலகோஷ்டி 8-30 மணிக்கு ஸ்ரீ மடத்தையடைந்ததும், வாசலில் கற்பூரமங்களஹாரத்தி எடுக்க, சதுர்த்தேங்காய்கள் உடைக்க, உள்ளே குதூஹலத்துடன் வரவேற்கப்பட்டது. உடனே விசேஷ திருவாராதநாதிகளுக்குப்பின் தளிகை ஸமர்ப்பிக்கப்பட்டு பூர்வாசார்யர்களுடைய தனியன்களை அநுஸந்தித்தபின் பட்டாபிஷேக ஸ்ரீமுகம் க்ரமமாக ஸேவிக்கத் துடங்கப்பட்டது.

ஸ்ரீமான் வி. ரங்காசார்யஸ்வாமி (ரிடையர்ட் டெபுடிகலெக்டர்)ஆரம்பத்தில் தமது உபங்யாஸத்தை உபக்ரமிக்குமுன், அத்யாபாகம் ஸ்ரீ. உப. என். வரதாசார்யஸ்வாமி பெருமாள் மரியாதைகளைப்பெற்று ஸ்ரீமுகத்தை இரண்டுமுறை ஸேவித்தார். ஸ்ரீ கலெக்டர்ஸ்வாமியும் உள்ளூர் ஏஜண்ட் ஸ்ரீ கோபாலஐயங்கார் ஸ்வாமியும் ஸ்ரீமுகத்திலுள்ள விவரங்களை ஸாங்கோபாங்கமாக எடுத்து விளக்கி, தன்னடிச்சோதிக்கு எழுந்தருளிய ஸ்ரீ அழகியசிங்கரின் பெருமைகளையும் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்திற்குச் செய்துள்ள லோகோபகார்யங்களையும், ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கருடைய கல்யாணகுணங்களையும் ஸவிஸ்தாரமாக, 'ஆசார்யபக்தி' என்னும் விஷயத்தை ஸாங்கோபாங்கமாக உள்ளம் உருகும்படிக்கு உபங்யஸித்து முடித்தார்கள்.

பின்னும் பலர் ஸ்ரீ ஆசார்யர்கள்விஷயமாகப் பேசியபின்பு வேதகோஷத்துடன் பெருமாள்ஸம்பாவனைமுதல் துடங்கி க்ரமமாக ப்ரக்ருத 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வரையில் ஸம்பாவனைகள்செய்யப்பட்டு, முத்தாரத்தி, மங்களஹாரத்கள் எடுக்க, கோஷ்டிக்கு பலமந்த்ராக்ஷதை, சந்தந தாம்பூலம், சர்கரை முதலியவை வினியோகிக்கப்பட்டு, மங்கள வாத்ய இன்னிசைகளுடன் இரவு 10-30மணிக்குக் கூட்டம் இனிது பூர்த்தியுற்றது.

ஆத்ரேயம், கிடாம்பி, ஆர். நரஸிம்ஹாசார்யர்,

காரியதரிசி

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ௵ வைகாசி ௴-1953 ௵ மே-ஜூன்-௴

[உத்தராயணம் - வஸந்த ருது - ரிஷப ௴]

14—5—53	1௨	வியாழக்கிழமை	சூன்யதிதி-ரிஷபரவி 8-58. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)
15—5—53	2௨	வெள்ளிக்கிழமை	ரிஷபசுக்ல த்ருதீயை திதி.
16—5—53	3௨	சனிக்கிழமை	அக்ஷய த்ருதீயை:
21—5—53	8௨	வியாழக்கிழமை	அதிதி.
24—5—53	11௨	ஞாயிற்றுக்கிழமை	ஸர்வ ஏகாதசி.
27—5—53	14௨	புதன்கிழமை	ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தி; விசாகம்; ஸ்ரீநம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
29—5—53	16௨	வெள்ளிக்கிழமை	கேட்டை; ஸ்ரீ அஹோபிலமடம் 35-வது பட்டம் (களத்தூர்) ஸ்ரீரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
3—6—53	21௨	புதன்கிழமை	ஷஷ்டி-ஸப்தமி திதித்வயம்.
4—6—53	22௨	வியாழக்கிழமை	அஷ்டமிதிதி.
7—6—53	25௨	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசிதிதி.
8—6—53	26௨	திங்கட்கிழமை	வைஷ்ணவஏகாதசி; த்வாதசிதிதி.
11—6—53	29௨	வியாழக்கிழமை	● ஸர்வ அமாவாஸ்யை.
13—6—53	31௨	சனிக்கிழமை	ரிஷபசுக்லத்விதீயைதிதி.
14—6—53	32௨	ஞாயிற்றுக்கிழமை	சூன்யதிதி; மிதுனரவி 33-10 (மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்.)

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar. 2. Audiappa mudali Street, Vepery, Madras-7.

(102-ம் பக்கம் தொடர்ச்சி)

முக்யமாக வேத சாஸ்த்ரபாடசாலை ஸ்தாபனம், வார்ஷிக மாலோல வித்வத்ஸதஸ், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகை ப்ரசுரம் முதலிய கைங்கர்யங்களைப்பற்றி ஸபை கார்யதரிசி பேசினார். இப்படிப்பட்ட மஹதாசார்யரின் மறைவைப்பற்றி அநுதாபத்தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு ஸபை கலைந்தது.

K. S. நரஸிம்ஹ ஐயங்கார், B. A. B. L., கார்யதரிசி.

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்.

ஸ்ரீஅஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் இம்மண்ணுலகைவிட்டு ஸ்ரீவைகுண்டப்ராப்தியடைந்தார் என்னும் செய்தியை தந்திமூலம் சென்ற 2-3-53 மாலை 3 மணிக்கு அறிந்து இந்த திவ்யதேசவாஸிகளும், ஸ்ரீஸந்நிதி சிஷ்யகோடிகளும் மிகவும் சோகித்தார்கள். உடனே திவ்யதேசப்பெருமாளான ஸ்ரீதேவாதிராஜன் ஸந்நிதியிலிருந்து திருமாலை, திருப்பரியட்ட மரியாதைகள் மேளவாத்ய எடுபடிகளுடன் ஸ்ரீமடத்திற்கு வந்ததை ஸ்ரீமதழகியசிங்கர் திருவுருவப்படத்திற்கு சாத்தி வைதிகமுறைப்படி சிஷ்யகோடிகளால் ஸ்ரீசூர்ணபரிபாலனம் செய்து ஸ்ரீமதழகியசிங்கர் படத்தை பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு உபநிஷத்பாராயணாதிகளுடன் திருவீதிப்ரமணம் நடந்து கோஷ்டி 6 மணிக்கு ஸ்ரீமடத்தையடைய தேரடி ஸமீபத்திலுமுள்ள நாகபுஷ்கரணியில் அவப்ருதம் நடைபெற்றது.

அவப்ருதஸ்நாநமானபிறகு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸந்நிதியில் தினப்படி ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாராயணம் நடைபெறறது. பிறகு ஷை ஸபையின் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஏராளமான ஸ்ரீஸந்நிதிசிஷ்யகோடிகளும், ஆஸ்திக பொதுமக்களும், ஸ்த்ரீகளும் குழுமியிருந்தார்கள். ஷை கூட்டத்திற்கு ஷை ஸபையின் உபதலைவர் தட்டை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி தலைமை வஹித்தார். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்ற 12 வருஷங்களாக ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தானத்தில் ப்ரக்யாதியுடன் விளங்கிவந்த இம்மஹான் மதுராந்தகத்தில் ஸம்ஸ்க்ருத வித்யாசாலையை பெரிய அளவில் ஏற்படுத்தியும், அநேகம் இடங்களில் வேத, வேதாந்த பாடசாலைகளை ஏற்படுத்த ஊக்கமளித்தும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை எளிதில் அனைவர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா என்ற மாதாந்திர பத்ரிகையை சாச்வதமாக நடத்திவர ஏற்பாடுகள் செய்துள்ளார். தமது உடல் அசக்தம் காரணமாக 1951 ௵ பிப்ரவரி மாதத்தில் ஸ்ரீஉப்பிலியப்பன் ஸந்நிதிக்கு அடுத்த தேவனார்விளாகம் ஸ்ரீமஹாவித்வான் ஸ்ரீ. உ.ப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமிக்கு ஆச்ரமஸ்வீகாரம் செய்துவைத்து உலகசிஷ்யகோடிகளுடைய பெரும் அபிமானத்தைப் பெற்றும், ஆஸ்திக உலகத்திற்கு பலவழிகளிலும் மஹத்தானதும் மறையாததுமாகிய பல சாச்வத கார்யங்களைச் செய்த 42-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் பரமபதத்தை யடைந்ததைக் குறித்து இந்தக் கூட்டம் மிகவும் வருந்துகிறது. இரவு 10 மணிக்கு இக்கூட்டம் முடிவுற்றது.

(ஆத்ரேயம் கிடாம்பி) ஆர். லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியார்,
கார்யதரிசி.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ௵ சித்திரை ௴-1953 ௵ ஏப்ரல்-மே-௴

[உத்தராயணம் - வஸந்த ருது - மேஷ ௴]

13—4—53	1௳	திங்கட்கிழமை	சூன்யதிதி-மேஷரவி 13-26. தமிழ் வருஷப்பிறப்பு பண்டிகை: (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)
14—4—53	2௳	செவ்வாய்க்கிழமை	சூன்யதிதி.
15—4—53	3௳	புதன்கிழமை	மேஷசுக்ல் த்விதீயைதிதி.
19—4—53	7௳	ஞாயிற்றுக்கிழமை	திருவாதிரை; ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்.
25—4—53	13௳	சனிக்கிழமை	வைஷ்ணவ ஏகாதசி.
28—4—53	16௳	செவ்வாய்க்கிழமை	சித்திரை; மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரம்.
9—5—53	27௳	சனிக்கிழமை	ஸர்வ ஏகாதசி.
11—5—53	29௳	திங்கட்கிழமை	த்ரயோதசி-சதுர்தசி திதித்வயம்.
12—5—53	30௳	செவ்வாய்க்கிழமை	● ஸர்வ அமாவாஸ்யை.
13—5—53	31௳	புதன்கிழமை	ப்ரதமை திதி.
14—5—53	வைகாசி ௴ 1௳	வியாழக்கிழமை	சூன்யதிதி; ரிஷபரவி 8-58. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malolapress, 30 Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar. 2. Audiappa mudali Street, Vepery, Madras-7.